T. 1577.

வெளியீடு எண் 68.

ஞானவுரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

௨௫-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 68.

ஞானசம்பந்தர் வழங்கிய
ஞானவுரை

இது
அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பெருந்தமிழ்ப் பேராசிரியர்
தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர்,
வித்துவான்,
திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்று

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உ௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்களின்
ஆக்ஞைப்படி வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1945

என்று மடியவ ருள்ளத் திருப்பன விவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக் குரியன வொண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே.

எனவே இடரகலும் இன்பமே எய்தும்
நனவே அரனருளை நாடும்—புனல்மேய
செங்கமலத் தண்டார்த் திருஞான சம்பந்தன்
கொங்கமலத் தண்காழிக் கோ.

—நம்பியாண்டார்நம்பி.

உ

சிவமயம்

முன்னுரை

"ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை" என்னும் இச் சிறுநூல், மதுரையில் நடந்த சைவ சித்தாந்த சமாஜ ஆண்டுவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவாகும். விழா நிகழ்ந்த சில நாட்களுக்குப்பின், எங்கள் தருமை யாதீனத்து மகாசந்நிதானமாக விளங்கியிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திரு முன்னே இச் சொற்பொழிவின் சுருக்கத்தைப்பற்றிப் பேச்சு நிகழ்ந்தது. மகாசந்நிதானம் அவர்கள் அருள் சுரந்து "இதனைச் சிறுநூலாக அச்சிட்டுச் சைவவுலகிற்கு வழங்கலாம்" என்று திருவாய் மலர்ந்து இதனை அச்சுக்குத் தருமாறு பணித்தருளினார்கள். அவ்வண்ணமே இஃது இன்று அச்சாகி வெளிவருகிறது.

சொற்பொழிவுக்கேற்ற நிலையில் ஒவ்வொரு பகுதியும் சுருங்கிய அளவில் காட்டப்பட்டிருக்கின்றது. ஞான சம்பந்தர் வழங்கியருளிய பாசுரங்களும் பிற பதிகங் களும் கொண்டு ஒவ்வொன்றினையும் தனித்தனியே விரித் தெழுதுதற்கு வேண்டிய பொருளும் வாய்ப்புக்களும் இல்லாமல் இல்லை. விரிக்கின் இந்நூல் பெருகும்; இதனைப் படிப்பவர் கருத்து அவற்றைப் பெருக ஆராய்ந்து

காண விழைவு கொள்ளும் என்ற கருத்தால் சுருங்கிய அளவில் வெளிவருகிறது.

இந்நூலை வெளியிடுதற்கண் விருப்பங்காட்டி ஊக்கிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள்,** வெளிவரும் இதனை நூலுருவிற் காட்டற்குரிய நலத்தினை இழந்தோமே என்ற வருத்தம் ஒருபுடை என்னெஞ்சினை அலைப்பினும் இப்போது எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானமாகிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** இந்நூல் வெளியீட்டின்பாற் காட்டும் பேரருள் அவ் வருத்தத்தைக்களைந்து ஊக்கத்தை யெழுப்புவதாயிற்று.

சென்னை இந்து அறநிலைய ஆணையாளராய் இருந்து சமயப்பணியும் தமிழ்ப்பணியும் மேன்மையுற்றுச் சிறக்கவும், திருக்கோயில்கள் செம்மையும் தூய்மையுமெய்தி வழிபாடியற்ற வரும் நன்மக்கட்கு வழிபாட்டிலும் திருவருட் பேற்றிலும் உள்ளம் நன்கு சென்று திளைக்குமாறு பெருநலங்கொண்டு விளங்கவும், ஏற்புடைய பல நன்முறைகளை வகுத்தவரும் தமிழாராய்ச்சியும் சமயப்பணியும் தம் வாழ்வின் உயரிய நோக்கமாகக்கொண்டு ஆராய்ச்சிகள் பல புரிந்துவருபவர்களுமான சைவத்திரு. ராவ்பகதூர், **C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L, F. R. G. S., F. M. U.,** அவர்கள் இச்சிறுநூலைப் படித்து ஆங்கிலத்தில் ஓர் அணிந்துரை வழங்கி இதனைச் சிறப்பித்தமைபற்றி என் நன்றியினை அவர்கட்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்றேரன்ன சமய ஞானப்பணியில் மக்களை ஈடு படுத்தும் திருவுள்ளத்தால் சிறியவும் பெரியவுமாகிய பல வெளியீடுகளால் சைவவுலகிற்கும் தமிழுலகிற்கும் பெருநலத்தை வழங்கியருளும் **ஸ்ரீ தருமையாதீனம்** "தமிழ் வளர் நெடுங்கோட்டுப் பொதியில் போல நிலைபெற்றுத் திகழ்க இந்நிலமிசை யானே" என வாழ்த்து முகத்தால் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"ஞால நின்புக ழேமிக வேண்டுந் தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே"

அண்ணாமலைநகர்,
24—7—45.

ஔவை. சு. துரைசாமி.

Foreword

Saint Gnanasambandar has left to the posterity a collection of songs numbering 384 decades brimming with sublime poetry, melodious music and divine wisdom. Mr. Avvai Doraisamy Pillai has made a special study of the life and sayings of this great Saint of the Seventh Century and has brought in a short compass an exact idea about teachings. He has committed to writing in the form of a pamphlet all the ideas which he expressed in a discourse which was delivered by him under the auspices of Dharmapurm Adhinam. The pamphlet gives in a concise form what an educated person should know all about the sayings of the Saint, how they depicted the environments and the times and how the several ideas given by the Saint were evolved out of the earlier ones as a development of thought from the early days to his time among the Tamils and how the Saint propagated his wholesome ideas to the world at large with the aid of literature and music. I am sure that this pamphlet would be useful to the mordern public and especially to the learned among them, who desire to know the truth about the philosophy of Saiva Siddhantham. We are grateful to the author of the pamphlet as well as to the Adhinam which has undertaken to publish it so that it might be useful to the public at large.

As an introduction to his work the author quotes an old stanza which estimates the value of Thevaram, the work of Sambandar and his Co-Saints, in the realm of Poetry and Religion, and proceeds to give a brief sketch of the life of the Saint and the work left by him. Then follow the results of a critical study as culled out of 384 decades. The deductions arrived at by the author in such a study of research regarding the state of temples at his time the worship in them, festivals and renovations conducted and made therein, and the beginning and the growth of puranic stories attached to temples are described in a narrative manner. Wherever possible, illustrations and quotations from the sayings of the Saint have been given in support of them. A comparison is made of the nature and the number of temples of the Sangam - age with those mentioned by the Saint in his songs. It is to be noted that the number of temples dedicated to Siva alone had grown upto 200 at his time. The worship of the deity with flowers after sacred bath with the aid of the five products from the cow which include milk, ghee and curd was in vogue. During festivals the devotees were freely fed. In certain months special festivals were celebrated. Among them were the Onam in Ayyppasi, Festival of lights in Karthigai, Arudra in Margali, Poosam in Thai, Sea Bath in Masi and Uttaram in Panguni. A detailed and graphic description of the last noted festival at Tiruvarur is found

in a well-known Thevaram and is an authentic and trust-worthy record of the festival in a temple 13 centuries ago. The Saint was not unaware of the work of his predecessors in the religious field. He has also acknowledged the merits of the work of his contemporary Saints. A scrupulous mention of the great deeds of devotion of the Saints Kannappar and Kochchenganan who built 70 temples with huge towers and platforms is found in his poems. The contemporaries have been held in equal veneration and a faithful record is made about the saints Muruga, Siruthondar, Naminandhi, Kulachirai and the great Pandya Queen Mangayarkarasi, who stemmed out Jainism and restored Saivism at Madura.

The main theme of this pamplet is condensed in two sections. The first section deals with the state of Saivism during the days of the Saint and the second about the wisdom and philosophy given by the Saint as gathered from his sayings. The Saint introduced and emphasised the worship of symbol in temples and the importance of the temple as a religious institution. Propaganda of religious ideas was made with the help of puranic stories and by connecting them with the temple worship. The worship in temples was prescribed as enacted by the Agamas. The authority of the Agamas in preference to all other works was clearly made out and effectively enforced. The two ancient languages Sanskrit and Tamil were given due recognition. Prakrit was eschewed as a language

of the vulgar. It is to be noted that in religions the Bhuddist and Jains who were outside the pale of Vaidic religions like Saivism, had hanled prakritd as the medium of propaganda during those days. It is noteworthy to find that the Saint gave a very high place to Tamil and takes pride in calling himself as a Tamilian and a Tamil poet. The saint also recognises the six schools of philosophy which were within the fold of Vedic religions and mentions them frequently in his songs.

The conception of philosophy or wisdom as propounded by the Saint Sambandar has been given for the first time in a considered form by him only. Before his time no author had given in fullest extent the ideas about Saivism in such clear and unvaried terms. It might be said that a regular treatise on Saiva Siddhantha came long after-wards in the famous works of Saivagnanabodham of the Saint Meikandar. But an embrio of the great philosophy is found already in the songs of the Saint in a succinct form. The author of this pamphlet has culled out all the relevant ideas in a regular form and has dealt them in a separate section.

When the Saint Sambandar began to revive Saivism the country was torn into several factions. due to the differences between the Vedic religions and those of the Buddhists and Jains. As a result of controversies among the people, ascetic mentality

fatalism or law of Karma. and disbelief in temple worship caught the mind of the people. Asceticism ought to be the end of a man's aspirations due to aversion of family life in his days. The Jain influence preached unstability of body and youth and enforced penancy even from the youth. The saint Sambandar opposed it as a harmful idea which would be useless for man's attaining perfection. He impressed that wisdom could be obtained even from the example shown by the Umamaheswara aspect of Siva.

Fatalism or the inevitabe and irresistable law of Karma was preached by the Buddhist and Jains. Saint Sambandar attacked it as useless to the world and as opposed to the mercifulness of God. Throughout his poems the Saint has impressed that by devotion to God the previous Karma as well as the present Karma could be destroyed. Even against the future Karma devotion will stand as a barrier. The author has given fine illustrations for this aspect of thought from the Saint's sayings.

The third and most important aspect, which was taught by the Saint, was worship. The utterance of the sacred name had the full effect of a prayer. The form of Siva must be an object of piety. The symbols of the deity as installed in temples should be real objects of worship. The devotee must not only purify his inner-self, he must also beautify his outer-body with religious symbols. Sacred ashes as

well as sacred beads should be worn. These signs have real significance. Even conversion in religion can be done by applying these signs to the body of a man. No more purification was necessary. Costly rites for conversion were eschewed. The deity in temples has to be worshipped with the aid of articles dear to man showing a spirit of sacrifice. With these ideas, the idea of worship was instilled into the minds of the people.

With the above said progressive reforms Saint Sambandar attracted the minds of the public and spread his religious ideas in the land. At first, the ruling monarchs were converted and as a result of it the entire country adopted the reformed religion.

Besides the above said practical reformation in the religion of the land the principles of Saiva Siddhanta philosophy were propounded. Siva is the supreme deity. He permiates the Universe. He exists both inside along and outside the Universe. He exists as life in life and as one in the five elements. He manifests Himself as the Triad when He conceives the three deeds, Creation, Preservation and Redemption. By His own sacrifice He stands as an example to the Universe to do the same. The anecdote of swallowing poison to save the Universe from destruction is an example of self-sacrifice. He is an embodiment of Mercy and thereby performs the fifth aspect attributed to him. He has to be approached

by souls only through pure devotion towards him, In the practical world devotion could be obtained through worship. In his songs the Saint has classified the people as two categories Great or Wise men and Ordinary men. The great or the devoted are those who have attained wisdom already and who devote their lives in religious worship only. The ordinary men will merely follow the footsteps of the Great. All these aspects have been introduced by the Saint in clear terms in his songs.

In conclusion, the author points out that the poems of the Saint not only showed the path of wisdom to the people but also stood as eminent example of literary merit and music. The aspect of music in his poems, has not been sufficiently understood by the present generation. The learned institutions of the present day should take up the question of music also and should try to propagate its true aspect to the public. The public must be grateful to the author of this pamphlet for his clear exposition of the wisdom of Sambandar as found in his songs.

Rao Bahadur,

Coimbatore, 22—7—45.

C. M. Ramachandran Chettiar.
B. A., B. L., F. R. G. S., F. M. U.,
Ex-Commissioner,
H. R. E. Board, Madras.

உ

குருபாதம்

ஞானசம்பந்தர் வழங்கிய

ஞானவுரை

முன்னுரை

"சைவத்தின் மேற்சம யம்வே
றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார
முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற்
றாளெம் உயிர்த்துணையே."

இந்த அழகிய பாட்டு ஒவ்வொரு சைவரும் நாடோறும் இறைவனைப் பாடி வழிபடும் பாட்டுக்களுள் ஒன்றாகும். இதன் கருத்தைச் சிறிது ஊன்றி நோக்குவோமாயின், ஒரு சிறந்த பொருளை நாம் அறியலாம். சைவத்தினும் மேற்பட்ட சமயம் வேறே ஒன்றும் இல்லை; அச்சைவத்துக்கு உரிய முதற்பொருளாகிய சிவத்தை விடப் பரம்பொருள் இல்லை என்று நான்மறைகள் கூறுகின்றன; அந்த மறைப்பொருளின் உண்மையைத் தேவாரமும், திருவாசகமும் வற்புறுத்துகின்றன; இவற்றைத் தமிழுலகிற்கு வழங்கித் தமிழ்மக்களை உய்திபெறச் செய்தவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர்,

மாணிக்கவாசகர் என்ற நால்வருமாவார்கள். தாம் திருவருட் பெருக்கில் திளைத்தாடி இன்புறும் சிவ போகப் பேரின்பத்தை ஏனையமக்களும் பெற்று நலம் எய்த வேண்டுமென்ற திருவுள்ளங்கொண்டு இத்தேவா ரத்தையும் திருவாசகத்தையும் வழங்கியருளிய நால்வரும் சிவஞான நெறியுரைத்த பேரருட் குரவன்மார்களாத லால், அவர் திருவடிகளை நாம் நம் உயிர்த்துணையாகக் கொண்டு உய்திபெறவேண்டும் என்பது இப்பாட்டின் கருத்தாக இருப்பதை நாம் அறிகின்றோம்.

இப்பாட்டு, "நான்மறைச் செம்பொருள் வாய்மை வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்" என்று கூறுவதை நோக்கினால், தேவாரத் திருமுறைகளும் திரு வாசகமும் மறைகள் நான்கும் உரைக்கும் செம்பொருள் எதுவோ அதனை உணர்த்துகின்றன என்று அறிகின் றோம். நான்மறையுரைக்கும் செம்பொருள் யாது எனின், சைவசமயமே சமயம் சிவபரம்பொருளே முதற்பொருள் என்பதே அச்செம்பொருளாவது; இதனை, இப்பாட்டு, "சைவத்தின் மேற்சமயம் வேறிலை யதிற்சார் சிவமாம், தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லெனும் செம்பொருள்" என்று கூறுகின்றது.

இனி, இத்தேவாரங்களும் திருவாசகமும் சைவர் களுக்கு விளைவிக்கும் பயனை, "உய்வைத்தர" என் பதனால் இப்பாட்டு உணர்த்துகின்றது. தேவார திரு வாசகங்களை ஓதியவழி மக்கள், பிறவித் துன்பத்தின் நீங்கி உய்தி பெறுவது உறுதி யென்றும், அக்கருத்தே பற்றி திருஞானசம்பந்தர் முதலிய திருவருட் குரவன் மார் இவற்றை வழங்கியருளினர் என்பதும் நன்கு விளங்க

"உய்யவைத்தரச்செய்த நால்வர்" என்ற தொடர் இப்பாட்டின் இறுதியடியில் நின்று இயம்புகின்றது.

இதுகாறும் கூறியவாற்ருல், திருஞானசம்பந்தர் முதலிய சான்றோர் நால்வரும் திருவாய்மலர்ந்தருளிய தேவார திருவாசகங்கள் சைவமக்கட்கு உய்திநல்கும் அறிவுநிலைய மென்பது இனிது விளங்கும். இவை நான்மறையின் செம்பொருளை யுணர்த்துகின்றன என்பது பொதுவாகிய கருப்பொருளாகும். இப்பெருமக்கள் நால்வரும் வழங்கிய திருப்பாட்டுக்களை இப்பாட்டு, தேவாரம் திருவாசகம் என இரண்டு கூறிட்டுக் காட்டுகின்றது. திருவாசகம் மணிவாசகப் பெருந்தகையால் அருளப்பட்டதாகும். தேவாரம் திருஞானசம்பந்தர் முதலிய மூவரும்பாடிய திருப்பாட்டுக்களைக் குறிக்கும். இவ்வாறு இப்பாட்டு மூவர்பாடியருளியவற்றைத் தேவாரமெனப் பொதுப்படக் கூறிற்ருயினும், ஞானசம்பந்தர் பாடியவற்றைத் திருப்பதிகமென்றும், நாவரசர் வழங்கியவற்றைத் திருப்பாட்டென்றும், நம்பியாரூரர் பாடியவற்றைத் தேவாரமென்றும் வகுத்துச் சிறப்பித்தோதுவதும் வழக்கமாகும்.

நால்வர் பாடியருளிய இத்தேவார திருவாசகங்கள் நான்மறைச் செம்பொருள் வாய்மையை உணர்த்துமென்பது இப்பாட்டினுல் விளக்கமெய்துவதுபோல, இந்நாற்பெருமக்களும் நால்வகைச் சைவநன்னெறிகளைத் தனித்தனி யொழுகிக் காட்டினர் என்று சான்ருேர் கூறுவர். அந்நான்கும் முறையே சரியை கிரியை யோகம் ஞானமென்றும்; சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கமென்றும் கூறப்படும். இவ்வாறு நெறி

வேறுபட்டுத் தோன்றினும் முடிவில் எய்தும் சிவபோகம் ஒருமைத்தன்மையில் மாறுவதில்லை. ஒருமை முடிபு எய்தியோர், மேற்கொண்டொழுகிய நெறிவகையில் வேறுபட்டுத் தோன்றுதலால், அவ்வேறுபாட்டிற் கேற்ப, அப்பெருமக்கள் வழங்கியருளிய அறிவுரைகளும் சிற்சில வகையில் வேறுபடுதற்கு இடமுண்டு. அதனால், அவர்கள் வழங்கிய அருட்பாட்டுக்களை ஆராய்தல் இன்றியமையாததாகின்றது. ஆனதுபற்றியே, இப்போது அவருள் ஞானசம்பந்தர் வழங்கியருளிய ஞானப்பாட்டுக்களை ஓராற்றால் ஆராய்கின்றாம். அவையனைத்தையும் மேற்கொண்டு, அவற்றால் உரைக்கப்படும் பொருள் அனைத்தையும் ஈண்டு ஆராயாது சமயநெறி பற்றியவற்றையே வரைந்து கொண்டு ஆராய்தலால், "ஓராற்றால் ஆராய்கின்றாம்" எனல் வேண்டிற்று.

2. ஞானசம்பந்தர் வரலாற்றுக் குறிப்பு

திருஞானசம்பந்தர் இற்றைக்குச் சுமார் 1300 ஆண்டுகட்குமுன் சீகாழிப்பதியில் சிவபாதவிருதயர் என்ற அந்தணர்க்கும் பகவதியார் என்ற அவர் மனைவியார்க்கும் தவமகனாய்ப் பிறந்த சான்றோராவர். சிவபாதவிருதயர் தம்பெயர்க்கேற்பச் சிவபரம்பொருளின் திருவடிமறவாச் சிந்தையராவார். அவர் மனைவாழ்க்கைத் துணைவியாராகிய பகவதியார், "எவ்வுலகும் பெறற்கரிய பெருமையினார்" என்றும், "கற்புமேம்படு சிறப்பால் கணவனார் கருத்தமைந்தார்" என்றும் சேக்கிழார் பெருமானால் சிறப்பிக்கப்படுபவர். அக்காலத்தே புத்தசமயமும் சமண்சமயமும் நம் தென்னாட்டிற் புகுந்து மக்களிடையே செல்வாக்கு மிக்குற்றதன் பயனாகச் சிவநெறியின் சீரொளி மழுங்கி

யிருந்தது. இதனை, "ஆதி அருமறை வழக்கம் அருகி அரன் அடியார்பால், பூதிசாதன விளக்கம் போற்றல் பெருது" ஒழிந்தது என்று வரலாற்று நூல் கூறுகிறது. இந்நிலையைக்கண்ட சிவபாதவிருதயர் வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை மிக்க விளக்கமுறவும் வேண்டி ஒருமகனை அருளவேண்டுமென இறைவனை நாடோறும் வழிபட்டனர். பகவதியாரும் அதேகருத்துடன் சிவபரம் பொருளை நாளும் பரவிவந்தனர். இப்பெருமக்களின் கருத்து இனிது முடிவது பொருளாக இறைவனருளால் பகவதியார் மணிவயிற்றிற்பிறந்தருளினுர் ஞானசம்பந்தப் பிள்ளையார்.

ஒருதாய் கருவுற்றிருக்குங் காலத்தே எத்தகைய நினைவு செயல்களை மேற்கொள்ளுகின்ருளோ அவற்றிற்கேற்பவே அவள் வயிற்றிற்பிறக்கும் குழந்தையின்பால் அத்தகைய நினைவு செயல்கட்குரிய குணஞ் செயல்கள் உண்டாகும் என்று இக்காலத்தறிஞர் கூறுவர். மேனுட்டில் முற்காலத்தில் நிகரற்ற வீரனுய்த் திகழ்ந்த நெப்போலியன் என்பானை அவன்தாய் கருவுற்றிருந்தபோது உயரிய வீரர் வரலாறுகளைப் படித்துக்கொண்டிருந்தாள்; அதனுல் அந்த நெப்போலியன் உலகுமுற்றும் உட்கத்தக்க உயர்வீரனுய் விளக்கமுற்றுனென்று சான்றும் காட்டுவர். அன்றியும், ஒருத்தி தான் பெற்ற குழந்தைக்குப் பாலூட்டும்பொழுதும் அவளுடைய நினைவு செயல்கள் அமைதியும் அன்பும் அறமும் பொருந்தியிருக்குமாயின், அவள்பாலுண்ணும் குழந்தைக்கு அந்நலமனைத்தும் நன்குபடியும் என்பர். இதற்கு வரலாற்று நூல்களிலிருந்தும் மேனுட்டு வெளியீடுகளிலிருந்தும் பல சான்றுகளைக் காட்டுகின்றனர்.

இக்கருத்துக்களனைத்தும் ஞானசம்பந்தர் வரலாற்றினும் காணப்படுகின்றன. பகவதியார் இவரைக் கருக்கொண்டிருந்தபோது, தம் நினைவு செயல் முழுவதும் சிவபரம்பொருளின் திருவருளிலே ஈடுபடுத்தியிருந்தனர். "அரவணிந்த சடைமுடியார் அடியலால் அறியாது பரவு திருநீற்றன்பு பாலிக்குந்தன்மையராய், விரவுமறை மனை வாழ்க்கை வியப்பெய்த" வாழ்ந்து வந்தாரென்று வரலாறு எடுத்துரைக்கின்றது. ஞானசம்பந்தப்பிள்ளையாரை மனங்குளிரப் பெற்றுப் பாலூட்டியபோதும், அப்பகவதியார் சிவபெருமான் திருவடிக்கண் பதிந்த அன்போடு பாலூட்டினர். இதனை, சேக்கிழார் பெருமான்,

"பெருமலை பயந்தகொடி பேணுமுலை யின்பால்
அருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
தருமிறைவி யார்பரமர் தாள்பரவு மன்பே
திருமுலை சுரந்தமுது செய்தருளு வித்தார்"

என்றும், அக்குழந்தைக்கு நீராட்டிக் காப்பிட்டபோதும் அப்பகவதியார் சிவநெறிக்குரிய சீலமே நினைந்து, "வேறு பல காப்புமிகை என்றவை விரும்பார், நீறுதிருநெற்றியில் நிறுத்தி நிறைவித்தார்" என்றும் ஓதுகின்றார். இதனால், ஞானசம்பந்தப்பிள்ளையாரைப் பெற்ற பெற்றோர் சிவநெறிக்குரிய நினைவுசெய்கைகளை மேற்கொண்டொழுகியிருந்த செம்மைநிலை நன்குவிளக்கமாதலைக் காணலாம்.

இவ்வண்ணம் சிவனடியே சிந்திக்கும் செம்மையுடையார் கருவிலிருந்து சைவத் திருப்பணிக்குரிய காலத்திலே பிறந்து சிவநெறிக்குரிய செவ்விய சீலத்திலேயே வளர்ந்த ஞானசம்பந்தர் தமது மூன்றுமாண்டினில் ஒருநாள் தம் தந்தையாருடன் திருக்குளத்துக்குச் சென்று,

திருவருளால் சிவஞானசம்பந்தரானார். தந்தையாருடன் திருக்குளத்துக்குச் சென்ற பிள்ளையார் குளக்கரையில் நிற்ப, சிவபாதவிருதயர் குளத்துள் இறங்கி நீராடலுற்றா ராக, கரையில்நின்ற பிள்ளையார் தம் தந்தையாரைக் காணாது "அம்மே அப்பா" என்று அழுதார். அந்த அழுகைநிலையைச் சேக்கிழார்,

"கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்களாற் பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை யொலிபெருக எவ்வுயிரும் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமியழ ,தருளினார்"

என்றொரு சொல்லோவியம் தீட்டிக் காட்டுகின்றார்.

இவ்வண்ணம் அழுது நின்ற பிள்ளையாரின் நிலை கண்ட சீகாழிப்பரமன் தேவியுடன் அங்கே எழுந்தருள, அவர்தம் பிள்ளைமை நிலையின் பெற்றிகாணும் உமை யம்மைக்கு அன்புபெருகத் தம் திருமுலையில் பால் சொரிய நின்றார். பரமன் தேவியை நோக்கியருளி, "பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்டுக" என்றாராக, அவரும் அவ்வாறே பொற்கிண்ணத்திற் கறந்து, பிள்ளையார்க்கு ஊட்டி, அப்பொற்கிண்ணத்தையும் அவர்கையில் தந்து அழுகை தீர்த்துவிட்டு நீங்கிவிட்டார். சிறிது போதில் சிவபாதவிருதயர் போந்து, பிள்ளையார் பாலுண்டிருப் பதைக்கண்டு, வெகுண்டு, "எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டுக" என்று சொல்லி, ஒரு சிறிய மாறுகொண்டு ஓச்சி யச்சுறுத்தினார். அப்போது, தேவ ருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகிய சிவ ஞானப்பாலை யுண்டபண்பினால், மலர்போலும் தமது

அருமைத் திருக்கையைத் தூக்கி, ஒரு விரலால், எட்டியுஞ் சுட்டியும் காட்டப்படாத முதல்வனைச் சுட்டிக்காட்டி,

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே"

என்பது முதலிய திருப்பதிகத்தைப் பாடியருளினார். தேவியார் தந்த திருமுலைப்பாலுண்ட சிறப்பால், பிள்ளையார் ஞானசம்பந்தர் எனப்படுவாராயினர். அவர் பெற்ற ஞானத்தை யுரைக்கப் போந்த சேக்கிழார்,

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

என்று விரித்துங் கூறுகின்றார். ஞானசம்பந்தரும் தாம் பாடிய திருப்பதிகங்களுள் ஒன்றில், தமக்கு இறைவன் பாலூட்டியதும், தந்தை வெகுண்டதும் குறித்துக் காட்டுவாராய்,

"போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்;
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே"

என்று தாமே பாடிக் காட்டுகின்றார்.

இவ்வாறு தேவியார் அருளிய ஞானப்பாலுண்டு

ஞானசம்பந்தராகிய பிள்ளையார் தமிழகத்தில் உள்ள சிவாலயங்கள் பலவற்றிற்குஞ் சென்று மிகப்பல திருப்பதிகங்கள் பாடியுள்ளார். இடையிடையே அவர் தாளம் பெற்றதும், முத்துச்சிவிகை பெற்றதும், பொற்கிழி பெற்றதும், படிக்காசு பெற்றதுமாகிய பலபேறுகளையும், திருமருகலில் விடம்தீர்த்ததும், திருமறைக்காட்டில் மறைக்கதவங்களைத் திறக்கவும் மூடவும் பாடியதும், பாண்டியநாட்டில் சைவத்தை நிலைநாட்டியதும், திருக்கொள்ளம்பூதூரில் ஆற்றில் ஓடம் செலுத்தியதும், திருவோத்தூரில் ஆண் பனையைப் பெண்பனையாக்கியதும், திருமயிலாப்பூரில் என்பைப் பெண்ணாக்கியதுமாகிய பல அற்புதச்செயல்களையும் அவரது வரலாறு கூறுகின்றது. ஞானசம்பந்தராகிய வரலாறு மட்டில் நமக்கு இன்றியமையாதாதல் பற்றி அதனை மட்டில் சிறிது விரிவாகக் கண்டோம்.

3. திருப்பதிகங்கள்

ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய திருப்பதிகம் பதினாயிரம் என்றும், திருமுறை கண்ட காலத்தில் முந்நூற்றெண்பத்துநான்கே கிடைத்தன என்றும், அவை மூன்று திருமுறைகளாக வகுக்கப்பெற்றன என்றும் திருமுறைகண்ட புராணம் கூறுகின்றது. அவை, "தோடுடைய செவியன் முதல் கல்லூரென்னும் தொடை முடிவாப் பரசமயத் தொகைகள்மாளப், பாடினார் பதிகங்கள் பாவிலொன்றும் பதினாயிரமுளதாப் பகருமன்றே" (14) என்றும், "பண்புற்ற திருஞானசம்பந்தர் பதிக மூந்நூற்றெண்பத்துநான்கினால் இலங்கு திருமுறை மூன்று" (25) என்றும் வருவனகாண்மின். இவ்வாறு ஞானசம்பந்தர் பாடிய பதிகங்களுள் முந்நூற்றெண்பத்து நான்கே முறைவகுத்த காலத்தே கிடைத்தனவாயினும்,

இப்போது அவற்றுள் ஒரு திருப்பதிகம் காணப்படவில்லை; முந்நாற்றெண்பத்துமூன்றே கிடைத்துள்ளன. அவற்றோடு, கல்வெட்டினின்றும் எடுக்கப்பட்ட திருவிடைவாய்த் திருப்பதிகத்தைக் கூட்டினுல், முந்நாற்றெண்பத்துநான்கென்னும் தொகை நிரம்பிவிடும்; ஆனுல், அதன்கண் பண்வகுப்பொன்றும் காணப்படாமையால், அஃது இத்திருமுறைகளுள் அடங்கியதோ மறைந்தவற்றுள் ஒன்ருே என்று துணியக் கூடவில்லை. அன்றியும், கிடைத்திருக்கும் முந்நாற்றெண்பத்துநான்கு திருப்பதிகங்களுக்கும் பதிகமொன்றுக்குப் பதினென்ருகக் கணக்கிடின் நாலாயிரத்துஇருநூற்றிருபத்துநான்கு பாட்டுக்களாகும்; ஆனுல் கிடைப்பன நாலாயிரத்துநூற்றிமைம்பத்தெட்டேயாகும். எனவே, அறுபத்தாறு பாட்டுக்கள் இடைக்காலத்தே மறைந்துபோயின என்றறிகின்ருேம்.

இனி, ஞானசம்பந்தப் பெருமான் இந்த முந்நாற்றெண்பத்துநான்கு திருப்பதிகங்களால் நம்மனோர் அறிந்து உய்திபெறும்பொருட்டுக் காட்டியருளிய நன்னெறியைக் காணத்தொடங்குமுன், அத்திருப்பதிகங்கள் தோன்றுதற்குக் காரணமாயிருந்த அக்காலத்தின் நிலையினை நாம் முதற்கண் அறிதல்வேண்டும். இப்பதிகமனைத்தும் சமயநெறிபற்றிய திருப்பாட்டுக்களாதலால், நாம் காணவேண்டியதும் அக்காலத்துச் சமயநிலையேயாகும். அத்திருப்பதிகங்கள் அக்காலத்துச் சமயநிலையேயன்றி, மக்களின் சமூகம், வாணிபம் முதலிய நிலைகளை உணர்த்தும் குறிப்புக்களும் கொண்டுள்ளன. அவற்றையாராய்தல் ஈண்டைக்குப் பொருளன்மையின், அவற்றைவிடுத்துச் சமயநிலையினையே இங்கு எடுத்துக்கொள்கின்ருேம்.

4. திருக்கோயில் திருவிழா முதலியன

ஞானசம்பந்தர் காலத்துக்கு முன்னும் சங்ககாலத்துக்குப் பின்னுமாகிய இடைக்காலத்தில் சமயத்துறையில் மிகப்பல மாறுதல்கள் நம்நாட்டில் நிகழ்ந்திருக்கின்றன. சங்ககாலத்தில் சைவசமய வுண்மைக்குரிய குறிப்புக்கள் காணப்படுகின்றனவே யெனினும், ஞானசம்பந்தர் காலமாகிய ஏழாம் நூற்றாண்டில் இருந்ததுபோலக் கோயில்களும் குளங்களும் பெருகியிருக்கவில்லை. "பணியியரத்தை நின்குடையே முனிவர், முக்கட்செல்வர் நகர்வலஞ் செயற்கே" (புறம். 6) எனக் காரிகிழாரும், "அணங்குடை முருகன் கோட்டத்துக், கலந்தொடாமகளிரின் இகழ்ந்து நின்றவ்வே" (புறம். 299) என்று பொன்முடியாரும், "ஞாலநாறும் நலங்கெழுநல்லிசை, நான்மறை முதுநூல் முக்கட்செல்வன், ஆலமுற்றம் கவின்பெறத் தைஇய, பொய்கை சூழ்ந்த பொழில்" (அகம். 18) என்று பரணரும் இவ்வாறே பிறரும் கூறுவனவற்றால் சிவபெருமானுக்கும் முருகனுக்கும் பிறதெய்வங்கட்கும் கோயிலுண்மை யறிகின்றோம். இந்நூல்களில் அருகித்தோன்றும் இக்கோயில்கள், இளங்கோவடிகள் காலத்தே சிறிது பெருகியிருக்கின்றன. "பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வேளணிதிகழ் கோயிலும், வால்வளைமேனி வாலியோன் கோயிலும், நீலமேனிநெடியோன் கோயிலும், மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்" (5:169-173), அமரர்தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம், புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம் பகல்வாயில், உச்சிக்கிழான் கோட்டம் ஊர்க் கோட்டம் வேற்கோட்டம், வச்சிரக்கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம் (9:9-12) முதலிய கோட்டங்களும் சிலப்பதிகாரத்திற் காணப்படுகின்றன.

இனி, சிலப்பதிகாரத்தின் நீங்கி வருவோமாயின், ஏழாம் நூற்றாண்டாகிய ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் காலத்தில் தமிழ் நாட்டில் சிவபெருமானுக்கு மாத்திரம் இருநூறுக்கு மேற்பட்ட கோயில்கள் இருந்திருக்கின்றன. இக்கோயில்களில் நாடோறும் பாலும் நெய்யும் தயிரும் நீரும் கொண்டு திருமேனியை நீராட்டலும், பூக்கொண்டு வழிபடுதலும், திங்கள்தோறும் அடியார்க்கட்டிட்டல், ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிக்கடலாட்டு, பங்குனி யுத்தரம், அட்டமிவிழா, பொற்றுப்பு, பெருஞ்சாந்தி முதலிய விழா வயர்தலும் காணப்படுகின்றன. "கண்ணூரக் காணுதே போதியோ பூம்பாவாய்" (183:8) என்று ஞானசம்பந்தர் கூறுவதை நோக்கின், இவ்விழாக்களைக் காண்பது கண்பெற்ற பயனுகக் கருதப்பட்டமை துணியப் படும். திருவாரூர்த் திருவாதிரை விழாவைத் திருநாவுக்கரசர் சிறப்பித்துக்கூறும் திருப்பதிகம் அவ்விழா நிகழ்ச்சியை நம்மனக்கண்முன் அழகு திகழக் காட்டுகின்றது. "வீதிகள்தோறும் வெண்கொடியோடு விதானங்கள்;" பக்கங்களில் சாதிகளாய பவளமும் முத்தும் கலந்த தாமங்கள்; வந்து கூடுவோர் "நணியார் சேயார் நல்லார் தீயார்" எல்லாருமாவர். பத்தரும் பாவையரும் விரதியரும் வானேரும் அவ்விழாவிற் காணப்படுகின்றனர். பிணியுற்றோர் பலர் அதுதீர்வு குறித்து அவ்விடத்தே கிடக்கின்றனர். விழாக்காண்போர் வாயிலிருந்து, "துன்பம் நும்மைத் தொழாத நாட்கள்; இன்பம் நும்மை ஏத்தும் நாட்கள்" என்பன முதலிய சொற்கள் கேட்கப் படுகின்றன. அவர்கள் செல்லும் செலவு குறித்துப் பாடலுற்ற நாவரசர்,

"முடிகள் வணங்கி மூவாதார்கள் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானரமங்கையர் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடுந்தொண்டர் புடைசூழ
அடிகள் ஆரூர் ஆதிரைநாளா லதுவண்ணம்."

என்று பாடுகின்றார். இதன்கண் மூவாதாரும் மங்கையரும் முறையே முன்னும் பின்னும் செல்ல, தொண்டர்கள் புடைசூழ, இடையே ஆரூர் இறைவன் செல்கின்றானென்பது எத்துணை இன்பமாகவுளது காண்மின். இக்கூட்டத்தில் உயர்ந்தோர் உயர்வும் தாழ்ந்தோர் தாழ்வும் மதிக்கப்படவில்லை. "எம்மான் ஈசன் எந்தை என் அப்பன்" என்று இறைவனை ஏத்தும் எண்ணமிகுதியால் "தம்மாண்பிலராய்த் தரியார்தலையால் முட்டுவா"ராய் முற்படுகின்றனர். இவ்விழாவில் சங்கும் பறையும் குழலும் யாழும் கூத்தும் பாட்டும் குறைவின்றியிருக்கின்றன. இதனால் ஏழாம் நூற்றாண்டில் மக்களுள்ளத்தே சமயவுணர்வு நன்கு வேரூன்றி விட்டமை இனிது புலனாகிறது.

5. கோயில்வரலாறு திருப்பணி முதலியன

இனி இந்தக் காலத்திலே புராணங்களின் செல்வாக்கு மிகுந்து விட்டிருக்கிறது. திருக்கோயில்களுக்குத் தலபுராணங்கள் உண்டாகியிருக்கின்றன. அவை நூல் வடிவில் இருந்தனவோ என்னவோ தெரியவில்லை; புராணவரலாறுகள் வழக்கிற்கு வந்துவிட்டன. கோயில்களுக்கு வருவோர்க்கு அவ்வரலாறுகள் உரைக்கப்பட்டிருக்கின்றன. ஞானசம்பந்தர் சென்றபோது அவர் அவற்றைக் கேட்டுத் தாம் பாடியருளிய திருப்பதிகங்களில் குறித்திருக்கின்றார். **பிரமதேவன் சீகாழிப்பதியில்**

இறைவனை வழிபட்டான் என்பதை, "ஏடுடையமலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான்" *(1)* என்றும், "சரியாநாவின் வேதகீதன் தாமரை நான்முகத்தன், பெரியான் பிரமன் பேணியாண்ட பிரமபுரத்தானே" *(63)* என்றும், "பூமகன் அலரொடு புனல்கொடு வழிபடு புறவமே" *(342:5)* என்றும், திருமறைக்காட்டிலும் அவனே தான் ஓதும் மறைகளோடு கூடி அவைகூறும் முறையே நின்று வழிபட்டானென்பதை, "உலகினில் உயர் ஒளிபெறுவகை நினைவொடுமலர், மறையவன் மறைவழி வழிபடும் மறைவனம்" *(22:6)* என்றும், திருத்தென்குடித் திட்டையில் **மறைகள் வழிபட்டன** என்னும் புராண வரலாற்றை "முன்னைநான் மறையவை முறைமுறை குறையொடும், **த**ன்னதாள் தொழுதெழ நின்றவன்" *(293:1)* என்றும் கூறுகின்றார். திருமாற்பேற்றில், "**மாலினார் வழிபாடு செய் மாற்பேற்று நீலமார்கண்ட**" *(55:4)* என்றும், திருமாணிகுழியில், "நித்த நியமத்தொழிலனாகி நெடுமால் குறளனாகி மிகவும், சித்தமதொருக்கி வழிபாடு செய்கின்ற சிவன்" *(335:4)* என்றும் திருமால் வழிபட்ட செய்தி காணப்படுகிறது. சீகாழியிலும் திருவெண்காட்டிலும் தேவர்கோனாகிய **இந்திரன் வழிபட்டது** கூறப்படுகிறது. திருவெண்காட்டில் அவ்விந்திரனேயன்றி, அவன் ஊர்தியாகிய **வெள்ளையானையும்** வழிபட்டதென்பார், "அடைந்து அயிராவதம் பணிய, மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடு" *(184:7)* என்றும், "இந்திரன் கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்" *(273:7)* என்றும் உரைக்கின்றார். **தசரதன் மகனாக இராமன் வழிபட்ட** செய்தி இராமேச்சுரத் திருப்பதிகத்தில் மிகுதியும் எடுத்துப் பேசப்படுகிறது; "தேவியை வவ்விய தென்னிலங்கைத் **தசமாமுகன்**,

பூவியலும் முடிபொன்றுவித்த பழிபோயற, ஏவியலுஞ் சிலையண்ணல் செய்த இராமேச்சுரம்" (268:2) என்று வருவது காண்மின்.

இவ்விராமாயணச் சார்பே கொண்டு நோக்கின், அதன்கண் வரும் வாலியென்பான் சிவபெருமானைத் திருவட்குரங்காடுதுறையில் வழிபட்டதாக, அவ்வூர் புராண வரலாறு கொண்டு, "நீலமாமணி நிறத்தரக்கனை யிருபது கரத் தொடொல்க, வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்" (349:8) என்று ஞானசம்பந்தர் கூறுகின்றார். மேலும், அவர், வாலியை "வாலியார்" என உயர்த்துக் கூறுவது அவன்பால் அவர்க்குள்ள நன்மதிப்பை நாம் அறிய விளக்குவது காண்மின்.

இவ்வண்ணமே திருவுசாத்தானத்தில் (திருக்கோயிலூர்) சாம்புவன், சுக்கிரீவன், அனுமன் முதலியோர் வழிபட்டனரென்றும், திருப்புள்ளிருக்குவேளூரில் சடாயு வழிபட்டானென்றும் கூறுகின்றார். இப்பதிகத்தில் சடாயுவை, "ஆதித்தன் மகனென்ன அகன்ஞாலத்தவரோடும் போதித்த சடாயென்பான்" என்றும், "பொய் சொல்லா துயிர்போனான்" என்றும் புகன்றுரைக்கின்றார். அவன் உடன் பிறந்த சம்பாதி யென்பவனும் புள்ளிருக்குவேளூரில் இருந்து, "யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும் ஒழியாமே, பூசனைசெய் தினிதிருந்தான்" என்றும், "வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப், போதத்தால் வழிபட்டான்" என்றும் ஞானசம்பந்தரால் சிறப்பிக்கப்படுகின்றான்.

இனி, * பாரதவீரர்களுள் பாண்டவரில் ஒருவனான விசயன் வழிபட்டுப் பாசுபதம் என்னும் அம்புபெற்ற வரலாறு, திருக்கோகரணத் திருப்பதிகத்தில், "பாசமத றுத்தவனியிற் பெயர்கள் பத்துடைய மன்னனவனைக், கூசவகை கண்டுபின் அவற்கருள்கள் நல்கவல கோகரணமே" (337:10) என்று கூறப்படுகிறது. இங்கே விசயனைப் 'பெயர்கள் பத்துடைமன்னன்" என்றதுபோலவே, பிறிதோரிடத்தில், "பத்தொரு பெயருடைவிசயனை" (344:7) என்பர்.

இவ்வாறு திருக்கோயில்களைப் பற்றிய புராணச் செய்திகளைக் கூறியருளுவது போலவே, சிவத் தொண்டர் வரலாறுகளையும் ஆங்காங்கு ஞானசம்பந்தப் பெருந்தகையார் உரைத்துள்ளார்கள். **கண்ணப்பர், சண்டேசுரர்** என்ற இருவர் வரலாற்றுக் குறிப்புக்களைப் பலவிடங்களில் உரைக்கின்றார். **கண்ணப்பர் தம் கண்ணை யப்பி** நலம்பெற்ற வரலாறு திருக்காளத்தியில் நிகழ்ந்த நிகழ்ச்சி யென்பது உலகறிந்த செய்தியாதலின், திருக் காளத்தித் திருப்பதிகத்தில் பிள்ளையார் "வாய்கலசமாக வழிபாடு செயும் வேடன் மலராகு நயனம், காய்கணையி னலிடந் தீசனடி கூடுகாளத்திமலையே" (327:4) என்பர். இதனையே கூடற்சதுக்கத் திருப்பதிகத்தில் "கண்ணப் பர்க்கருள்செய்த கயிலை" (367:7) என்றும், தென்குடித் திட்டைப்பதிகத்தில், "கானலைக்கும் அவன் கண்ணிடந் தப்பநீள், வானலைக்குந்தவத் தேவுவைத்தான்" (293:7)

---

* பாரதப் போர் நிகழ்ச்சி வேதகாலத்துக்கும் மோஹெஞ் சோதாரோ ஹாரப்பா என்பவற்றிற் கண்ட தொல்காலத்துக்கும் முந்தியதென ஹீராஸ் பாதிரியார் (Rev. Father Heras) கூறு கின்றார்.

என்றும் கூறுகின்றார். சண்டேசுரர் தம் தந்தையின் தாளறவீசிச் சண்டேசநிலையெய்திய நிகழ்ச்சி திருச்சேய்ஞலூருக்கு உரியதாதலால் அவ்வூர்ப்பதிகத்தில், "பீரடைந்த பாலதாட்டப் பேணாதவன் தாதை, வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந்தான் தனக்குத், தாரடைந்த மாலை சூட்டித் தலைமைவகுத்த தென்னே" (48:7) என்று பாராட்டிய பிள்ளையார், அச்சண்டேசுரர் புகழை, திருக்கோளிலி, திருவூறல், திருவேட்டக்குடி முதலிய திருப்பதிகங்களிலும் திருப்பாசுரத்திலும் நிலைபெறச்செய்துள்ளார். இவ்விருவரையும் போலவே, புகழ்த்துணையார், முருகநாயனார், நீலநக்கர், சிறுத்தொண்டர், நமிநந்தி, குலச்சிறையார், மங்கையர்க்கரசியார் முதலிய பெருமக்களையும் தாம் அருளிய திருப்பதிகங்களில் குறித்துள்ளார்.

இனி, இத்திருக்கோயில்களுக்குத் திருப்பணியும், வழிபாடும் புரிந்த பண்டைய அரசர்களையும் பிள்ளையார் குறித்தருளுகின்றார். திருப்பூவணத் திருப்பதிகத்தில், "முறையால் முடிசேர் தென்னர், சேரர், சோழர்கள் தாம் வணங்கும், திறையாறொளிசேர் செம்மையோங்கும் தென்திருப்பூவணமே" (64:1) என்றும், திருமூக்கிச்சரப் பதிகத்தில், "சீரினாலங்கொளிர் தென்னவன் செம்பியன் வில்லவன், சேரும் மூக்கீச்சரத்தடிகள்" (256:9) என்றும் மூவேந்தரையும் பொதுப்படக்கூறுகின்றார். இம்மூவர்க்கும் முறையே கயல், புலி, வில் என்ற மூன்றும் கொடியாம் என்றும், சோழர்க்கும், சேரர்க்கும் உறையூரும் வஞ்சியும் தலைநகரமென்றும் இத்திருமூக்கீச்சரப் பதிகத்தே குறித்திருப்பதோடு, இம்மூவருமே இத்திருமூக்கீச்சரக் கோயிலுக்குத் திருப்பணி செய்தனரென்றும் கூறியிருக்கின்றார்.

காவிரிப்பூம்பட்டினத்துத் திருக்கோயில் பல்லவனீச்சரம் எனப்படுவதை நோக்கின் ஞானசம்பந்தர் காலத்துக்குமுன்பே பல்லவவேந்தரும் இத்திருப்பணியில் கலந்துகொண்டமை தெரிகிறது. திருப்பிரமபுரத் திருப்பதிகத்துட்காணப்படும் "நட்டார் நடுவே நந்தனுள" (63:11) என்ற தொடர்க்கண்வரும் நந்தன் ஒரு பல்லவனாக நினைக்கப்படுகின்றான். கோச்செங்கட்சோழன் செய்த சைவப்பணியைப் பிள்ளையார் பல திருப்பதிகங்களில் குறிக்கின்றார். வைணவ ஆழ்வாருள் ஒருவராகிய திருமங்கைமன்னன், திருநறையூர்த் திருமால் கோயிற்கு அவன் செய்த திருப்பணியை வியந்துரைக்கவந்தவிடத்து சிவன் கோயில்கட்கு அவன் செய்துள்ளபணி மிகுதியாதலை விதந்து, "இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு எழில்மாடம் எழுபதுசெய் துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன்" (6:6:8) என்றது சீரிய சரித்திரச் சான்றாகிறது.

இதுகாறும் கூறியவாற்றால் ஞானசம்பந்தப் பிள்ளையார் காலத்தே தமிழ்நாட்டில் சைவ சமயம் நன்கு வேரூன்றி யிருந்தமையும், அதனை வற்புறுத்தும் சான்றுகளாக மிகப்பல திருக்கோயில்கள் விளங்கினமையும், அவற்றில் நாடோறும் திங்கடோறும் வழிபாடும் விழாக்களும் நிகழ்ந்தமையும், அரசர்களும், செல்வர்களும், தொண்டர்களும் திருப்பணிபுரிந்தமையும் இனிது விளங்கின்றன.

சிவநெறிக் குறிப்புக்கள்

இனி, இச்சிவநெறிக்கண் சிவபரம்பொருளின் திருவருட் செயல்களாகப் பலசெய்திகள் வழங்கிவந்திருக்

கின்றன. சிவபெருமான், கணபதியையும் முருகனையும் பெற்றது, கங்கையைத் திருச்சடையில் தாங்கியது, உமை காண நடமாடியது, காளியைக்கொண்டு தாருகனையடக்கியது, தக்கன் வேள்வியைக் கெடுத்தது, முப்புரத்தை யெரித்தது, காமனைக் காய்ந்தது, பிரமன் சிரம்அரிந்தது, திருமாலுக்கு ஆழியருளியது, ஆலின்கீழ் இருந்து முனிவர் நால்வர்க்கு அறமுரைத்தது, விடமுண்டது, தாருக வனத்து முனிவர்விடுத்த யானையையுரித்தது, பலிவேண்டிச் சென்றது, குபேரனைத் தோழனாகக் கொண்டது, காலனைக்காய்ந்தது, திருமாலும் பிரமனும் அடிமுடிதேடியது, இராவணனை யடர்த்தது முதலிய பலசெய்திகள் பிள்ளையார்காலத்தே நாட்டுமக்களிடையே பரவியிருக்கின்றன.

மேலே கூறியவாறு திருக்கோயில்களுக்குத் தல புராணங்களும் சிவபெருமானைப்பற்றிய புராணங்களும் நாட்டில்பரவிச் சைவசமயத்துக்கு ஆக்கம் பயந்து நிலவுகையில், திருக்கோயில்களில் எழுந்தருளும் திருமேனியைச் சிவமென்றே தெளிந்து வழிபடும் நன்மக்கட்குச் சமய வொழுக்கமும், நெறிகளும் தோன்றிச் சமய வொழுக்கங்களை யுண்டுபண்ணின. அவற்றின் சார்பாக நான் மறையும், ஆகமங்களும் சமயவுணர்வுடையோர் இடையே நிலவுவனவாயின. வழிபாட்டிலும் விழாக்களிலும் மறையோதுவோர் உளராயினர்; திருக்கோயில் அமைப்பும் வழிபாட்டிற்குரிய நெறியும் ஆகமங்களின் வாயிலாக உரைக்கப்படலாயின. அவ்வாகமங்களே சமயவுணர்வு ஒழுக்கங்களுக்கு வேண்டும் அறிவுரைகள் பெறுதற்கு வாயில்களாயின. இம்மறையும் ஆகமங்களும் இறைவனால் வழங்கப்பட்டன என்ற கருத்து ஞானசம்பந்தர் காலத்தேயே கற்றோரிடையே வேரூன்றிவிட்டது. "தொகுத்

தவன் அருமறையங்கம் ஆகமம், வகுத்தவன்'' (281:6) என்றும், ''ஆறுபதமும் ஐந்தமர்கல்வியும், மறைமுதல் நான்கும், மூன்றுகாலமும் தோன்றநின்றனை'' (128) என்றும் பிள்ளையார் ஓதுகின்றார். வேதங்களின் முடிபொருளும் ஆகமங்களின் அரியபொருளும் சிவபரம் பொருளையே உணர்த்துவன என்பது அறிஞர் கருத்து. ''வேதியன் விண்ணவரேத்த நின்றான் விளங்கும் மறையோதிய ஒண்பொருளாகி நின்றான்'' (270:1) என்று அக்கருத்தை உடன்பட்டு வற்புறுக்கும் பிள்ளையார், ''வேதமோதிய வொண்பொருளாயினான்'' என்றது கொண்டு அதுவே முடிந்த அறிவென்று கொள்ளலாகாது; அவன் வேதத்தால் தொழப்படுபவன்; வேதத்துள்ளும் அதன் முடிவிலும் அதற்கு வேறாயும் உளன் என்று நிலவிய அறிவுநூற் கருத்துக்களையும் எடுத்தோதுகின்றார். ''அங்கமும் நான்மறையும் அருள்செய்து அழகார்ந்த அஞ்சொல் மங்கையோர் கூறுடையான்'' (108:4) ''விழையாவுள்ளம் நன்கெழ நாவில்வினைகெட வேதமாறங்கம், பிழையாவண்ணம் பண்ணியவாற்றால் பெரியோரேத்தும் பெருமகன்'' (42:7) என்பனபோலும் உரைகளால் மறைகள் அவனால் அருளப்பட்டன என்று வற்புறுத்தி, ''முன்னைநான் மறையவை முறைமுறை குறையொடும் தன்னதாள் தொழுதெழ நின்றவன்'' (293:1) என்பதனால், வேதம் தன் குறைபாட்டால் அவனை வழிபடுவது கூறி, ''மறைகள் முற்றுமாகி வேறுமானான்'' (53:2) என்பதனால் வேதத்துள்ளும் அதற்கப்பாற்பட்டும் விளங்குதலை நமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறு மறைகளின் வேறாகியும், முற்றுமாய் ''மறை அவன்'' (121:8) என்று பரவப்படுதலின், மறை

வழியே நின்று வேள்வி முதலியன வேட்டு மறையோதி வழிபடும் நெறியும், புலன்களையடக்கி, காமம் முதலிய குற்றங்களைக் கடிந்து, யோகக்காட்சியால் வழிபடும் நெறியும், இல்லிருந்து நல்லறம் புரியுமாற்றால் வழிபடும் நெறியும் ஞானசம்பந்தர் காலத்தே தமிழகத்தே இருந்திருக்கின்றன. இவை முறையே வைதிகநெறி யென்றும், யோகநெறி யென்றும், ஏனையவை அவரவர் வல்லவாறியற்றும் பத்திநெறி யென்றும், அவை எண்ணிலாதன என்றும் பிள்ளையாரால் கூறப்படுகின்றன. இவற்றுள் வைதிகநெறி மறையவரிடத்தே வைத்து அவரால் காட்டப் படுகிறது. இதனை, "மண்ணின் மறையோர் மருவு வைதிகமும் மாதவமும் மற்றுமுலகத்து, எண்ணில் பொருளாயவை படைத்த இமையோர்கள் பெருமான்" (338:6) என்று உரைப்பது காண்மின். யோகநெறியின் இயல்பை "பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள் வாய்ப் பாலே போகாமே காவாப் பகையறும் வகைநினையா, முத்திக்கேவிக்கத்தே முடிக்கு முக்குணங்கள்வாய் மூடா வூடா நாலந்தக்கரணமும் ஒருநெறியாய்ச், சித்திக்கேயுய்த் திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம் பொருள் சேர்வார் தாமே தானாகச் செயுமவன்" (126:7) என்று தெரிவிக்கின்றார். இவையிரண்டு மல்லாத எளிய பத்திநெறி பற்றுவோர் கற்று வல்லோரும் ஏழையடியாருமாகின்றனர். அவருள் கற்றுவல்லோர் வழிபாட்டினை, 'பாமருவும் கலைப்புலவோர் பன்மலர்கள் கொண்டணிந்து பரிசினாலே, காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து நின்றேத்தும் கழுமலமே", (129:9) என்றும், ஏனையோர் வழிபாட்டைக் "கோழைமிடறாககவி கோளுமிலவாக இசைகூடும் வகையால், ஏழையடியாரவர்கள் யாவை சொனசொல் மகிழும் ஈசன்" (329:1) என்றும் விளக்கியருளுகின்றார். இறுதியிற் கூறிய

எளிய வழிபாட்டினை ஆடவரும் மகளிரு மென்ற இருபாலாரும் பெரும்பாலும் மேற்கொண்டொழுகுகின்றார்க ளென்பதை, "மாதரொடும் ஆடவர்கள் வந்தடி யிறைஞ்சி நிறைமாமலர்கள் தூய்க், கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல்கின்ற வளர் கோகரணமே" என்றும், "நல்ல மடமாதர் அரன்நாமமும் நவிற்றிய திருத்த முழுகக், கொல்லவிட நோயகல்த ரப்புகல்கொ டுத்தருளு கோகரணமே" (337:2.7) என்றும் எடுத்தோதுகின்றார்.

இதுகாறும் காட்டிய வைதிகம், யோகம், பத்தி யென்ற முக்கூறாய் நிலவும் சைவசமயத்தின் வேறாய்ப் புத்த சமயமும் சமண சமயமும் பிள்ளையார் காலத்தே இத்தமிழகத்தில் நிலவியிருந்திருக்கின்றன. சங்க இலக்கிய காலத்திலே காணப்படாத இச்சமயங்கள், மணிமேகலை சிலப்பதிகார மென்ற இருபெரு நூல்களின் காலத்தே தமிழகத்தே தோன்றி யிருக்கின்றன. இவ்விரு நூல்களையும் நோக்கின் புத்தசமயமும் சமண சமயமும் பெரும்பாலும் சோழநாட்டிலும் தொண்டை நாட்டிலும் பரவியுள்ளனவேயன்றிப் பிற பாண்டிநாட்டிலும் சேரநாட்டிலும் அத்துணையில்லை என்று தெரிகிறது. இவை பிள்ளையார் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்து மேலைக் கடற்கரை நாடு ஒழிய, ஏனை எல்லாப் பகுதியிலும் பரவி இருந்திருக்கின்றன.

அவர்கள் தமிழையோ ஆரிய மொழியையோ பயிலாது பாகத மென்ற மொழியையே பயின்றிருக்கின்றனர். புத்தர்கள் பிடக நூலும் சமணரது ஆகமமும் பிள்ளையாரால் எடுத்தோதப்படுகின்றன. அவர்கள்பால் அறமுரைத்தலும் சொற்போர் செய்வதும் பெருகக் காணப்படுகின்றன. சமணர் கூறும் சப்தபங்கி என்னும் நியாயம்

பிள்ளையாரால் காட்டப்படுகிறது. அவர்களால் வேத வேள்விகள் மறுக்கப்பட்டுள்ளன. இவ்விரு சமயத் தவரின் ஒழுகலாறுகள் ஞானசம்பந்தரால் மிகச்சில பதிகங்களொழிய ஏனை எல்லாவற்றிலும் ஒழியாது உரைக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர் சிலர், இச் சமண சமயம் ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி, ஆறாம் நூற்றாண்டிறுதியில் மிக்க செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டுமென்று * கருதுகின்றனர்.

இவையேயன்றி, பிள்ளையாரால் அறுவகைச் சமயங்கள் அடிக்கடி குறிக்கப்படுகின்றன. மேலே கூறிய அக் கோகரணத் திருப்பதிகத்திலேயே, ஆறுசமயங்களும் (337:6) குறிக்கப்பெறுகின்றன. ஆயினும், இவ்வாறிருக்கும் முதல்வன் சிவபெருமானே என்று கூறுவதை நோக்கின், இவை அகச்சமயங்களெனப்படும் ஆறையும் குறிக்கின்றனவோ என்ற எண்ணமுண்டாகிறது. "ஆறு சமயங்கட் கொருதலைவன்" (131:1) என்றும், "முன்னமிரு மூன்று சமயங்களவையாகிப் பின்னையருள் செய்த பிறையாளன்" (165:5) என்றும் பிள்ளையார் ஓதுகின்றார். முன்னே குறித்த கோகரணத் திருப்பதிகப் பாட்டும், "ஆறு சமயங்களும் விரும்பி யடிபேணி அரன் ஆகமம், மிகக் கூறுமனம் வேறிரதி வந்தடியர் கம்பம்வரு கோகரணமே" என்று கூறுகிறது. மேலும் ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சிபுரிந்த மகேந்திரவன்மபல்லவன் சமணனாய் இருந்தபோது மத்தவிலாசபிரகசனம் என்றொரு நாடகம் எழுதி அதன்கண் காபால சமயத்தவரையும் பாசுபதரையும் எள்ளிப்பேசியுள்ளான். இதனை நோக்குமிடத்து, பிள்ளையாரால் குறிக்கப்படும் சமயங்

---

* Saivism in South India p. 304.

களாறும் சாத்தம், காபாலம், பாசுபதம், மாவிரதம், கௌளம், யாமளம் என்ற ஆறுமாக இருக்கலாம் என்று எழும் எண்ணம் ஓரளவு ஆதரவு பெறுகிறது. பிள்ளையாரால் மறுத்துப்பேசப்படும் புத்தரும் சமணரும் புறச் சமயத்தைச் சேர்ந்தவராவர். இவை வேதத்தை மேற்கொள்ளாதனவாதலால் இவ்வாறு புறமென்று கூறப்படுகின்றன. "வேதவேள்வியை நிந்தனைசெய்துழல், ஆதமில்லியமணொடு தேரரை" என்றும், "வைதிகத்தின் வழியொழுகாதவக் கைதவம் முடைக்காரமண் தேரரை" (361:1,2) என்றும் ஞானசம்பந்தர் கூறுதல் காண்க.

ஞானவுரை

இனி, இவ்வைதிக பௌராணிக வழக்காறுகளும் கருத்துக்களும், சமயப் பிரிவுகளும், பௌத்தம் சைனம் முதலிய புறச்சமயங்களும் விரவிநின்ற காலம் ஞான சம்பந்தர் காலமென்பது இத்துணையும் கூறியவாற்றால் விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியால் மக்களிடையே சமய நிலையில் துறவுள்ளமும், வினையுணர்வும், கோயில் வழிபாட்டில் பற்றின்மையும் நிலவத்தொடங்கின.

உடல் கருவிகளைக் கொண்டு இந்நிலவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து செய்வன செய்து பெறும் நுகர்ச்சிகளை நுகர்வதில் வெறுப்புற்று, மனைவாழ்க்கையைத் துறந்து ஒழுகும் ஒழுக்கநெறியே துறவறமாகும். இத்துறவினை ஆசிரியர் தொல்காப்பியார் "காமஞ் சான்ற கடைக்கோட் காலை, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு" வாழும் ஆண்மகன் மேற்கோடற்குரித் தென்று கூறினர். சங்க இலக்கிய காலத்தும், "இன்னா தம்ம வுலகம், இனிய காண்கிதன் இயல்புணர்ந்தோரே"

(புறம். 194) என்றும், "ஓடி யுய்தலுங் கூடுமன், ஒக்கல் வாழ்க்கை தட்குமாகாலே" (புறம். 193) என்றும் சான்றோர் கூறுமாற்றால், துறவுள்ளம் நிலவிய வகையினை யறிகின்றோம். ஆயினும், இத்துறவு, இளமைப் போதிலே மேற்கொள்ளப் பெற்றதாகவோ பெறுதல் வேண்டுமென்றோ எங்கும் காணப்படவில்லை. இளமைக் களிப்பில் மயங்கி, யதற்கே யடிமையாயொழியாது, அதன் நிலையாமையை யுணர்ந்து, அறஞ்செய்தல் வேண்டுமென்றே பண்டைச் சான்றோர் வற்புறுத்தி யிருக்கின்றனர். சமண்சமய முனிவர் பலர் தோன்றி, அறங் கூறலுற்றபோது, * இளமைத் துறவினை யெடுத்தோதினர். அதனால் துறவுநெறிக்கண் கூடாவொழுக்கங்கள் உண்டாயின. ஞானசம்பந்தர் காலத்தும் இத்துறவு நிலவியிருக்கிறது. இதனை, "பிறவியால் வருவன கேடுளவாதலால் பெரிய இன்பத், துறவியார்க்கல்லது துன்ப நீங்காதெனத் தூங்கினாயே" என்றும், "தந்தைதாய் தன்னுடன் தோன்றினார் புத்திரர் தாரமென்னும், பந்தநீங்காதவர்க்குய்ந்து போக்கில்லெனப் பற்றினாயே" என்றும் (215:5,9) "பிறவிபிணி மூப்பினோடு நீங்கி யிமையோருலகு பேணலுறுவார், துறவியெனும் உள்ளமுடையார்கள்" (331:7) என்றும் ஓதுமாற்றால் அறிகின்றோம்.

வினையுணர் வென்பது தமிழ்நாட்டு வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே இருந்துவருவதாகும். தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இவ்வினை

---

* "நரைவரு மென்றெண்ணி நல்லறிவாளர், குழவியிடத்தே துறந்தார்" என்று சமண முனிவரும், தாமெழுதிய சௌந்தரானந்த காவியத்தில் பௌத்த சான்றோரான அசுவகோசரென்பாரும் கூறுதல் காண்க. (நாலடி. 11)

யுணர்வு காணப்படுகிறது. வினையானது உயிரறிவை மறைத்து நிற்கிறதென்றும், அதன் நீக்கம் அறிவின் விளக்கமென்றும் கூறுவார். ஆசிரியர் தொல்காப்பியனார், "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" (பொரு. மரபு. 95) என்று கூறுவதும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந் தாரைக் கண்ட ஔவையார், "இரவலர்க் கருங்கலம் அருகாது வீசி, வாழ்தல் வேண்டுமிவண் வரைந்தவைகல், வாழச்செய்த நல்வினையல்லது, ஆழுங்காலைப் புணை பிறி தில்லை" (புறம். 367) என்று அறிவுறுத்துவதும் மேலே கூறிய முடிபினை வற்புறுத்துவனவாகும். இவற்றிற்குப் பின்னே தோன்றிய தமிழ் நூல்கள் அனைத்திலும் வினையுணர்வு காணப்படாமல் இல்லை. வடநாட்டு வட மொழிக் கண்ணுள்ள தொன்னூல்கள் பலவற்றிலும் இதுபெரிதும் பேசப்படுகிறது, அவற்றுள் மிகத்தொன் மையவான வேதங்களின் அந்தமெனப்படும் உபநிடதங் களிலும் ஆகமங்களிலும் இவ்வினையுணர்வு ‡ குறிக்கப் பட்டுள்ளது.

நமது இந்திய நாட்டில் தோன்றிய எல்லாச் சமயங் களிலும் வினையுணர்வு இடம் பெற்றிருக்கிறது. வைதிக சமயமேயன்றி, புறச்சமயங்களான பௌத்தம் சைனம் முதலிய சமயங்களும் இவ்வினையுணர்வை வற்புறுத்து கின்றன. மேனாட்டாராய்ச்சியாளர் சிலர், இவ்வினை யுணர்வு மேனாடுகளிலும் அமெரிக்க நாட்டிலும் அறிஞ ருள்ளத்தே தோன்றியிருக்கிறது * என்கின்றனர்.

‡ Prof. Radhakrishnan's The Philosophy of the Upanishads pp. 120-5

* Vide page 114-5 of "Indian Buddhism" by Rays Dawidas Hibbert Lectures.

இவ்வினையுணர்வு தொடக்கத்தே உயரியதொரு நோக்கம் பற்றியே சான்றோர்களால் ஆராய்ந்து காணப்பட்டது. உலகவாழ்வில் மக்களறிவுக்கு எட்டாத நிலையில் நிகழும் நிகழ்ச்சிகட்குக் காரணமாய் நின்று ஆராயும் அறிவுக்கு அமைதி தருகின்றது; ஒருவரெய்தும் ஆக்கக்கேடுகட்கும் இன்பத் துன்பங்கட்கும் காரணமாய் அவர் மனத்தே உவப்பும் உலைவும் இலவாகச் செய்கிறது; அதனால் அவர் தமக்குத் துன்பம் செய்தார்பாலும் அன்புசெய்தற்குப் பெருந் துணையாகிறது. தாழ்ந்தோர் உயர்ந்தோரை நோக்கி அழுக்கற்று அவலமெய்தாது அமைதற்கும், உயர்ந்தோர் தாழ்ந்தோர்பால் அருள்கொண்டு ஆவன செய்தமைதற்கும் இவ்வினையுணர்வு பெரிதும் வேண்டப் படுகிறது. ஒருவர் ஓருயிர்க்குச் செய்யும் நலந்தீங்குகள் அவர் புத்தியின்கட்கிடந்து அவர் எடுக்கும் பிறப்புத் தோறும் சென்று இன்பத்துன்பங்களைப் பயக்கும் என்பது வினையுணர்வின் முடிபொருளாகும். ஆதலால் வினை யுணர்வும் மறுபிறப் புண்மையும் ஒன்றையொன்று இன்றியமையாது இணைந்து நிற்கின்றமை நோக்கிச் சான்றோரால் இவ்விரண்டும் ஒப்பவைத்து உரைக்கப் படுகின்றன. இற்றை நாளிலும் நம்நாட்டவர் நினைவிலும் சொல்லிலும் அடிக்கடி வினையும் பிறப்பும் பொருளாகக் கொண்ட சொற்கள் நிகழ்கின்றன.

வினைகளே பிறப்புக்குக் காரணமாதலின், வினை நீக்கத்தின்கண் அறிஞர் அறிவு நுனித்துச் சென்று, வினையென்பது ஒருவர் செய்யப் பிறக்கும் செய்கை யாதலின், அவர் தாம் வேண்டியவாறு செய்து வினைக்கு அடிமையாகாது அவ்வினையைத் தமக்கு அடிமையாகச் செய்து பயன்கொண் டொழியலாம் என்று கண்டனர்.

ஏனைய அவ்வறிவில்லாதார் வினைகட்குரிய வினைமுதல் தாமேயாதலை நோக்காது, அவ்வினையால் விளையும் துன்பத்தால் தாம் உழக்கும் துயரையே நோக்கி "அந்தோ வினையே" என்று அழுங்கலுற்றனர். வினையை நெறிப் படுத்தித் தமக்கு வேண்டும் நலம் பயக்குமாறு செய்து கொள்ளும் மனத்திட்பம் தம்பால் இல்லாமையை நினையாது, திட்பமெல்லாம் வினைகளிடத்தே உள்ளன என்று எண்ணி, வினை மிக்க வன்மையுடையதென்றும், அதனை நீக்கும் வன்மை தெய்வங்கட்குமில்லை யென்றும், கருதி வினைக்கே அடிமையாயினர். "பண்டு செய்வினையலால் பரவு தெய்வமொன், றுண்டெனில் தான்பயன் உதவ வல்லதோ" என்றும், "செய்வினை யின்றெனில் தெய்வம் என்செயும்" என்றும் உரைப்பாராயினர். "செய்தீவினை யிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால், எய்தவருமோ இருநிதியம்" என்பதுபோலும் அறவுரைகள் அவர்களால் வினையினது வன்மையும் தலைமையும் உணர்த்துவனவாக உணரப்பட்டன.

இந்நிலையில் அறிவுடையோர், "வினையென்பது செய்வோர் செய்தியேயாகும்; அஃது அறிவில்லது; செய்வோர் செய்திப்பயனை நுகர்விக்கும் அறிவன் இறைவன்; ஒருவர் செய்யும் வினை தனக்குரிய பயனைப் பயக்கும் நெறியில் ஒருசிறிதும் தவறுவதில்லை; அது செய்த உயிரொடு கிடந்து செய்திப்பயனை விளைவிக்கும் வகையில் எத்தனைப் பிறவி யெடுக்கினும் நீங்காத வன்மையுடைமை பற்றியே அஃது அருவினை யென்றும் வல்வினையென்றும் கூறப் படுகிறது" என்று உரைக்கலுற்றனர். அவ்வுரையை மனங்கொள்ளாத அம்மடவோர், "செயல்களே பலத்தைச் செய்யும் தெய்வம் வேண்டா இங்கு" (சிவ. சித்தி. 2:17)

என்பதுபோலும் வாதங்களை யெழுப்பித் "தெய்வ வழிபாடு வினைப்பகையை நீக்காது; அவரவர் வினையே அவரவர் செல்வ நல்குரவுகட்கும் உயர்வு தாழ்வுகட்கும் காரணமாவது" என்ற கொள்கையை நாட்டிற் பரப்பி விட்டனர். நாட்டில், கல்லாதவரும், நல்குரவாளருமே பெரும்பாலராதலின், அவர் கொள்கை எளிதில் பரவி விட்டது. வினைகளே தமக்குரிய பயனாகிய துன்பவின்பங்களைத் தம்மைச் செய்த உயிர்க்குக்கொடுத்து நுகர்விக்கும் என்ற கொள்கையினையுடைய சமயங்களும் அக்காலத்தே வந்து அவர் தம் கொள்கைக்கு ஆதரவு செய்யத் தலைப்பட்டன. இன்னோரன்ன காரணங்களால் நம் தமிழ் நாட்டில் ஞானசம்பந்தர் காலத்தேயே கடவுள் வழிபாட்டில் கருத்தூன்றாது நெகிழ்ந்து நீங்கும் சிறுமை நிலவுவதாயிற்று.

இந்நாளில் தோன்றியருளிய ஞானசம்பந்தப் பிள்ளையார் இக்கூறிய குறைகளைக் கண்டறிந்து அவற்றைக் களையுமாற்றால் வழிபாடொன்றே வினைநீக்கமும் வீடுபேறும் தரவல்லதாம் என்பதனை வற்புறுத்தியுரைக்கும் நன்னெறியினை மேற்கொள்ள வேண்டியவரானார். ஆதலால் அவர் புதுக்கொள்கையொன்றும் உரைக்காது, வினையினை நெறிப்படுத்திக் கோடற்கும், முன்னைவினைப் பயனை நுகரும் நுகர்ச்சியால் மேல்வினை நிகழ்தற்கு இடமாகாவாறு செய்து கோடற்கும் உயிர்கட்கு ஏற்ற வன்மையும் உரிமையும் தகுதியும் உண்டென்று எடுத்துரைக்கும் கடமையுடையராயினார். சுருங்கச் சொன்னால், **வினையுணர்வுக்கு அடிமையாய்க் கிடந்த மக்கட்கு அதனினின்றும் விடுதலை வழங்கினார் ஞானசம்பந்தப் பிள்ளையார்** என்பது சாலவும் பொருந்துவதாம்.

இறைவன் வழிபாட்டால் வினைத்தொடர்பினின்றும் உயிர்கள் உய்திபெறக்கூடும்; வினைகள் உயிர்களைத் தொடர்ந்து துயருறுத்தாவண்ணம் இறைவன் தடுத்து நலம் அருள்வன் என்ற கருத்துக்களை மக்கட்கு உணர்த்தப் புக்க ஞானசம்பந்தப் பெருமான்,

"வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்!
கடிகொள் கொன்றை கலந்த சென்னியன்
கொடிகொள் விழவார் கோலக்காவுள் எம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே." (23:6) என்றும்,

"உய்ய லுறுவீர்கள்!
ஐயன் ஆரூரைக்
கையினால் தொழ
நையும் வினைதானே." (91:4) என்றும்,

"ஊடினாலினி யாவதென்னுயர் நெஞ்சமே! யுறுவல்வினைக்
கோடிநீயுழல் கின்றதென்? அழலன்று தன்கையிலேந்தினான்
பீடுநேர்ந்தது கொள்கையான் பிரமாபுரத் துறைவேதியன்
ஏடுநேர்மதி யோடராவணி யெந்தையென்று நின்றேத்திடே."

(295:6) என்றும் பலமுறையும் வினைநீக்கம் வேண்டுவோர் இறைவனை வழிபடுவதே நெறியென்று அறிவுறுத்துகின்றார்.

இவ்வறிவுரை நிகழ்த்துமிடத்து, தம்மை வழிபடுவாரைப் பற்றி நிற்கும் வினையைக்கெடுத்து அவர்கட்கு இறைவன் உய்திநல்குவ னென்பதைப் பல திருப்பதிகங்களில் எடுத்தோதி வற்புறுத்துகின்றார். "வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வருமேல் வினையோடு, "பந்தித்திருந்த

பாவந்தீர்க்கும் பரமன்" (69:7); "புந்தியொன்றி நினைவார் வினையாயின தீரப்பொருளாய, அந்தியன்னதொரு பேரொளியான்" (3:5); "தனைக்கனி மாமலர் கொண்டு தாள்தொழுவாரவர்தங்கள், வினைப்பகையாயின தீர்க்கும் விண்ணவர்" (205:2); "தம்பெருமை பேசும் அடியார் மெய்த் திண்ணமரும் வல்வினைகள் தீரவருள் செய்த வுடையான்" (339:7) "பணிந்தவர் அருவினைபற்றறுத் தருள்செயத் துணிந்தவன்" (120:1) "நெறிகொள் சிந்தையராகி நினைபவர் வினைகெட நின்றார்" (229:7) என்பனபோலும் அருண்மொழிகள் மிகப்பல தம்முடைய திருப்பதிகங்களில் குறித்துரைக்கின்றார்.

இவ்வாறு வழிபாட்டால் வினைநீக்கம் பெறுந்திறமும், வழிபாடு செய்வோர் வினையை இறைவன் தீர்த்தருளும் இயல்புடையனாயிருக்கும் திறமும் கூறி வழிபாட்டின்கண் மக்கள் கருத்தைத் தெருட்டி உறுவித்த பிள்ளையார், வழிபடும் திறமும் கூறுகின்றார். இறைவனை அவன் திருப்பெயரை ஓதி, நீராட்டிப் பூச்சூடி வழிபட வேண்டுமென்பார், "நாவால் நாதன் நாமம் ஓதி நாடோறும் பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே" (199:2) என்றும்,

"தெரிந்த அடியார் சிவனே யென்று திசைதோறும்
குருந்த மலரும் குரவினலரும் கொண்டேந்தி
இருந்தும் நின்றும் இரவும் பகலும் ஏத்தும்சீர்
முரிந்து மேகந்தவழுஞ் சோலை முதுகுன்றே." (200:4)

என்றும், "பாலொடுநெய் தயிரும் பயின்றாடும் பரமேட்டி பாதம், காலையும் மாலையும் போய்ப்பணிதல் கருமமே" "பாடுதல் கைதொழுதல் பணிதல் கருமமே" (105:2,5)

என்றும் கூறுகின்றார். இப்பரமன் திருப்பெயரை ஓது வாரை, அவன் திருப்பெயர் பல்லாயிரமாதலின், வழிபடற் குரியதனை அறிந்தோர்பாற் கேட்டுக் கொண்மின் என் றற்கு "அறிவோரால் நாமம் அறிந்துரைமின்" (115:10) என்று அறிவிக்கின்றார்; அன்றியும் அதனை, "நக்கர்தம் நாமம் நமச்சிவாய வென்பார் நல்லரே" (267:9) என்றும், அது, "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது" என்றும், "நெஞ்சில் அன்பு மிகப் பெரிதும் நினைந்து அக்குமாலையால் எண்ணி அத் திருப்பெயரை ஓதுதல், ஓதுவோரை உயர்ந்தோராக்கும் என்றும் (307:1,3) உரைத்தருளுகின்றார்.

இவ்வாறு வழிபாட்டின் திறத்தை யோதுமிடத்து, இறைவன் திருப்பெயரை அறிந்தோரால் அறிந்துரைக்க வேண்டும் என்றவர், இறைவன் திருவேடத்தையும் தொண்டரையும் இறைவனென்றே தேறி வழிபட வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

இறைவன் திருவேடங்கள் மருந்தும் மந்திரமுமாவன; வினையைக் கெடுப்பன; ஓதியோர்க்ககப்படாவொண் பொருளை ஓர்விப்பன; மனமாசு நீக்கி வானுலக போக வாழ்வு எய்துதற்கு வேண்டும் வழிகளைக் காட்டுவன; துளக்கமில்லாதன; தூயதோற்றத்தை யுடையன; அல்லல் கெடுக்கும் அருமருந்தாவன; இவற்றால் உணர்த்தப்படும் நெறிகள்,

"விண்ணுலாவும் நெறி வீடுகாட்டும் நெறி
மண்ணுலாவும் நெறி மயக்கந்தீர்க்கும் நெறி
தெண்ணிலா வெண்மதி தீண்டு தேவன்குடி
அண்ணலானே றுடை அடிகள் வேடங்களே." (283:5)

என்று பிள்ளையாரால் பெரிதும் புகழ்ந்தோதப் படு கின்றன. இத்திருவேடங்களைக் கொண்டு இறைவன் அவற்றைச் சிவமென்று தேறி வழிபடுவோர்க்கு வினைத் தொடர்பைக் கெடுத்து வீட்டுநெறி காட்டுவன் என்ற கருத்தை, "வீடுகாட்டும் நெறி" யென்றதற் கேற்பப் பிறிதோரிடத்தும், "வேடங்லை கொண்டவரை வீடுநெறி காட்டி வினைவீடுமவரே" (331:1) என்று கூறுகின்றார். இவ்வாறு பிள்ளையாரால் விதந்தோதப்படும் திருவேடத் தின் இயல்பை யுணர்ந்த மெய்கண்டதேவர், "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும், அரனெனத் தொழுமே" (சிவ. போ. சூ. 12) என்று உரைத்தருளினார். அதற்கு உரைகண்ட அருணந்திசிவனார், "அறிவரியான் றனையறிய ஆக்கையாக்கி, அங்கங்கே உயிர்க்குயிராய் அறிவுகொடுத்தருளால் செறிதலினால் திருவேடம் சிவ னுருவேயாகும்" (சிவ. சித். 12:3) என்று உரைக்கின்றார். இதனால், இறைவனை வழிபடும் எண்ணமுடையோர்க்குத் திருவேடத்தின் இன்றியமையாமையைப் பிள்ளையார் வற்புறுத்தியிருத்தலைப் பெறுகின்றோம்.

இத்திருவேடங்களுள் ஒன்றாய் இறைவன் திருமேனிக் கண் கிடந்து நல்லொளி திகழும் திருநீற்றினையும் வழி படுவோர் அணிதல் வேண்டும் என்றதற்கு அத்திருநீறே பொருளாகப் பிள்ளையார் திருநீற்றுப்பதிகத்தைப் பாடி யருளியுள்ளார். அதன்கண் அவர், திருநீறு மந்திரமும் தந்திரமும் ஆவது; வெந்துயர் தீர்ப்பது; போதந்தருவது; புன்மை தீர்ப்பது; முத்தி தருவது; பத்தி தருவது; பேணி யணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது; பெருந்தவத் தோர்களுக்கெல்லாம் ஆசை கெடுப்பது; அவலம் அறுப் பது; வருத்தம் தணிப்பது; இருமைக்கும் உள்ளது; ஏல

உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது; எண்திசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது; இராவணன் முதலாயி னோரும் அணிவது என்பது போலும் இயல்புகள் அத்திரு நீற்றுக் குண்டென அத்திருப்பதிகத்தே எடுத்தோது கின்றார்.

இனி, புறத்தே சிவவேடமும் அகத்தே சிவனடி நிலவும் சிந்தையுமுடைய திருத்தொண்டர்களையும் பேணு தல் வேண்டும்; அவரோடு இணங்குதல் வேண்டும் என்று பிள்ளையார் வற்புறுத்துகின்றார். இத்தகைய வேடமுடை யோர் வினை நீக்கமுற்றோராதலால் அவர்களைப் பேணு வதும் கூடியிருப்பதும் வேண்டும் என்பதாம். இதனைத் "தோடுலாவிய காதுளாய் சுரிசங்கவெண் குழையாய் என்றென்று உன்னும் வேடங்கொண்டவர்கள் வினை நீங்க லுற்றாரே" (185:3) என்றும், அவருள்ளத்தே-இறைவன் எழுந்தருளும் சிறப்பை, "பெரியார்(தன்) கழலென்றுந் தொழுதேத்த, உள்நிலாவியவர் சிந்தையுள் நீங்கா ஒருவன்", "உள்ளமார்ந்த அடியார் தொழுதேத்த உகக்கும் அருள்தந்து, எம் கள்ளமார்ந்து கழியப்பழி தீர்த்த கடவுள்" (2:3,7) என்பன முதலியவற்றால் உணர்த்துகின்றார்.

இவ்வடியவர்களைப் பேணிவழிபடல் வேண்டு மென் பார், பிள்ளையார், "எம் ஈசர் தொண்டர்தொண்டரைத் தொழுதடிபணிமின்கள் தூநெறி எளிதாமே" (240:10) என்றும் "கறைபெற்றமிடற்றண்ணல் கள்ளில் மேயான், நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சுள்ளானே" (119:4) என்றும் அறிவுறுத்தி, அடியார் வழிபாட்டின் இன்றி யமையாமையை எதிர்மறை முகத்தால் வைத்து,

"பொடியார் மெய்பூசினும் புறவின் நறவம்
குடியா வூர் திரியினும் கூப்பிடினும்
கடியார்பூம் பொழிற்சோலைக் கள்ளில் மேயான்
அடியார் பண்பிகழ்வார்கள் ஆதர்களே." (119:7)

என்று வற்புறுத்துவதைக் காண்மின். அடியார் வழிபாட்டினைக் குலச்சிறையார் செயலில் வைத்து, "கணங்களாய் வரினும் தமியராய்வரினும் அடியவர் தங்களைக் கண்டால், குணங்கொடு பணியுங்குலச்சிறை" யென்றும், "நாவணங்கியல்பாம் அஞ்செழுத்தோதி, நல்லராய் நல்லியல்பாகும், கோவணம் பூதி சாதனங் கண்டால் தொழுதெழுகுலச்சிறை" (378:4,8) என்றும் உரைக்கின்றார்.

இனி, தாமே இறைவன்பால், அடியவர் இயல்புகளை எடுத்தோதிப்பரவி, அவர்க்கெய்தும் இடர்களைக் களைதல் வேண்டுமெனப் பணிந்து கேட்பதும் இவர் செயல்களுள் ஒன்றாகக் காணப்படுகிறது. அடியார் இயல்புகளை, "கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார்," "பாடல் ஆடல் பேணி இராப்பகலும் நினைந்தெழுவார்," பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர் சுமக்கும் நின்னடியார்," "நின்தாளிழற்கீழ் நிலைபுரிந்தார்," "சாந்தம் ஈது என்று எம்பெருமான் அணிந்த நீறு கொண்டார்," "நல்லவாய் மொழியாலேத்தி, இராப்பகலும் நின்று நைவார்," "நின்னடியே நெஞ்சில் வைப்பார்" (52:1,2,3,4.7,8,9) என்று புகழ்ந்து, "இடர் களையாய்" என்று வேண்டுகின்றார். "எம்பெருமான் அணிந்த நீறுகொண்டார்" என்று ஈண்டுக் கூறியது போல, பிறிதோரிடத்தே, "தோளின்மேல் ஒளி நீறு தாங்கிய தொண்டர்" (187:2) என்று புகழ்ந்தோதுவர்.

மேற்கூறிய தொண்டர்கள் தொண்டுபட்டுப் பரவும் முதல்வனாகிய சிவபரம்பொருள், உலகில் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிலவும் இயல்பை யுடையனென்று அறிவு நூல்களால் அறிகின்றோம். ஒன்றும் நிலையில் உலகெலாமாகியும், வேறும் நிலையில் உலகினை நீங்கியும், உடனும் நிலையில் உலகுயிர்க்குயிராய் நிறைந்தும் அருள் செய்வன் என்பது துணியப்படும். இக்கருத்தை ஞான சம்பந்தர் பல திருப்பதிகங்களில் எடுத்தோதுகின்றார். "ஈறாய்முத லொன்றாய்இரு பெண்ணாண்குண மூன்றாய், மாறாமறை நான்காய்வரு பூதம்அவை யைந்தாய், ஆறார் சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய், வேறாய் உடனானிடம் வீழிம்மிழலையே" (11:2) என்பதனால் அம்மூவகை நிலையினையும் பிள்ளையார் உரைப்பது காண்மின். ஒன்றும் நிலையினை, "மண்ணொடுநீர் அனல்காலோடு ஆகாயம் மதியிரவி, எண்ணில்வரும் இயமானன் இக பரமும் எண்டிசையும், பெண்ணினொடாண் பெருமை யொடு சிறுமையுமாம் பேராளன்" (184:3) என்றும், வேறும் நிலையினை, "புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந் தாய் நிலனைந்தாய்க் கரணம் நான்காய், அவையவை சேர் பயனுருவாய் அல்லவுருவாய் நின்றான்" (129:7) என்றும், உடனாய் நிற்கும் நிலையினை, "உரைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம், நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்" (132:4) என்றும் உரைக்கின்றார்.

இப்பரமன் மும்மூர்த்திகளாய் உலகினைப்படைத்தல் காத்தல் அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்வன் என்பார், "படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை" (128) என்று தெரிவிக்கின்றார். இவ்வாறே பிரண்டும்

"பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய சிவன்," "உலகுகள் நிலைபெறுவகை நினைவொடுமிகும் அலைகடல் நடுவறி துயிலமர் அரியுருவியல்பரன்," "உயிரவையவை, முழுவது மழிவகை நினைவொடு முதல் உருவியல்பரன்" (21:1,2,3) என்று விளக்குகின்றார். இவ்வாறு உயிர்களை யொடுக்குதற்குக் காரணமாகிய பரமனை முதல்வன் என்ற கருத்தையும் பிள்ளையார், "முதலுருவியல் பரன்" என்பதனால் குறித்திருத்தலைக் காணலாம்.

இப்பரமன் நீதியே வடிவாகவுடையன் என்பார் "இன்னவுரு இன்னநிற மென்றறிவ தேலரிது நீதிபலவும் தன்ன வுருவாமென மிகுத்த தவன்" (329:4) என்று கூறி, பிறுண்டும் அக்கருத்தை, "நிலமிகு கீழுமேலும் நிகர்யாது மில்லை யெனநின்ற நீதியதனை, நலமிகு தொண்டர் நாளும் அடிபரவல் செய்யும் நனிபள்ளி" (220:8) என்று வற்புறுத்துகின்றார்.

இம்முதல்வன்; ஒருபால் உமையமர்ந்து விளங்க, முடியிற் சடையும், பிறையும், கங்கையும் உடையனாய், விடமுண்டான்; இருவர் தேட நின்றான் என்பன முதலிய வரலாறுகளை யுடையன் என்று நூல்கள் கூறுவதுண்டு. இவையாவும் உயிர்கட்கு அருள்செய்தற் பொருட்டே நிகழ்ந்தனவாம் என்பார், "நாடுந் திறத்தார்க்கு அருளல்லது நாட்டலாமே" (312:6) என்று பிள்ளையார் ஓதுவது காண்மின். சென்னியில் பிறையும் பாம்பும் கங்கையும் கொண்டது உயிர்கள் மெய்ந்நெறியுணர்ந்து நலம்பெறுதற்கு என்பார், "தூநெறி பெறுவாரெனச், சென்னிதிங்களைப் பொங்கராக் கங்கையோடுடன் சேர்த்தினார்" (214:5) என்றும், "நிலன் நாள்தொறும் இன்புற

நிறைமதி யருளினனே" (261:1) என்றும், உயிர்கள் போகம் நுகர்தற் பொருட்டுத்தான் உமையோடு கூடி ஞன் என்றற்கு, "தரைமுதல் உலகினில் உயிர்புணர் தகைமிக, விரைமலி குழலுமையொடு விரவதுசெய்து நரைதிரை கெடு தகவது அருளினன்" (123:6) என்றும், அண்ட ருய்ய்வும் அவுணர் மாயவும் விடமுண்டார் (271.7) என்றும் பிள்ளையார் விளக்கியருளுகின்ருர். இவ்வாறே, பரமன் பலிக்கு உழன்றசெய்தியும் அருள் காரணமாக நிகழ்வதே யன்றிப் பலியேற்று உண்டல் வேண்டியன்று என்பார், "மனமுலாம் அடியவர்க் கருள் புரிகின்ற வகையலாற் பலிதிரிந்துண்பிலான்" (76; 6) என்பர்.

இவ்வண்ணம் உயிர்கட்கு, அருள்செய்வது காரண மாகப் பல செயல்களை நிகழ்த்தும் பரமன் உள்ளன் போடு தன்னைப்பரவிப் பணியும் அடியார்தம் உள்ளத்தே யிருந்து இன்புறுத்தும் இயல்பினைப் பல திருப்பாட்டுக் களில் விளக்கி யுரைக்கின்ருர். "மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து, செய்யராஞர் சிந்தையானே" (50:4) என்றும், "அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற் றைம்புலனு மடக்கி ஞானம், புகலுடையோர் தம் முள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணர்" (132:6) என்றும், "தேனுமா யமுதாகி நின் ருன்தெளி சிந்தையுள்" (146:6) என்றும், "கழலுன்னி எண்ணுந்தனையும் அடியாரேத்த அருள்செய்வான், உண்ணின்றுருக வுவகை தருவார்" (196:7) என்றும், "உரிமையுடைய அடியார் கள் உள்ளூற வுள்கவல்லார்கட்கு, அருமையுடையன காட்டி அருள்செயும் ஆதிமுதல்வர்" (203:10) என்றும் இவ்வாறு பல விடத்தும் கூறுவது காண்மின். "அருமை

யுடையன காட்டி யருள்செயும்" என்றது, "நாயினேற்கே காட்டாதன வெல்லாம் காட்டிப் பின்னும், கேளாதன வெல்லாம் கேட்பித்தென்னை, மீட்டேயும் பிறவாமற் காத்தாட்கொண்டான்" (சதக. 28) என்ற மணிவாசகத்தை நினைப்பிக்கின்றது.

இனி, இறைவன் உயிர்கட்கு உவகைதரும் நெறியினை யுணர்த்தி, மக்களை அந்நெறிக்கண் நிறுத்தி இன்பம் பெறுவிக்க வேண்டுமென்ற பிள்ளையார், "உள்ளம் உருகில் உடனுவர்" (247:3) என்றும், "தேனுமாயமுதாகி நின்றான் தெளிசிந்தையுள்" (245:6) என்றும் இவை போல்வன பலவும் பல பதிகங்களில் எடுத்துக்கூறி வற்புறுத்துகின்றார். உள்ளம் உருகுதற்கேதுவாகிய அன்பும், சிந்தைத் தெளிவும் பெறுவது எங்ஙனம்? சிந்தைக்கண் தெளிவு பிறக்கின், இறைவன் தேனும் அமுதுமாய் இன்புறுத்துவன்; அதனால் அவன்பால் அயரா அன்பு செய்தலும், அதுகாரணமாக அவன் உடனாய் நிற்ப, வினைநீக்கமும் வீடுபேறும் பெறல் கூடும்.

சிந்தையில் தெளிவு நிகழாமைக்குக் காரணம் இயற்கையாகிய உயிரறிவும் செயற்கையாகிய கல்வியினாலாம் பாசவறிவும் முனைத்து நிற்பதேயாகும். இவ்விரு வகை யறிவும் முதல்வனைக் காண்டற்குத் துணைசெய்வன அல்ல; அவனுடைய திருவடி ஞானமே துணையாவது. அந்த ஞானத்தாலே அவனைச் சிந்தைக்கண் நாடி அவன் உயிர்களிடையே ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றலை யுணர்தல்வேண்டும். அவன் உடனாய் நின்று, காணும் கண்ணுக்குக் காட்டியும் உடனிருந்து கண்டும் உயிர் ஒழுகுமாறுபோல, பரமன் உயிர்கட்கு அறிவினை அறிவித்தும்

அறிந்தும் உபகரிக்கும் உண்மையை யுணர்தல் வேண்டும். அவன் அறிவித்தாலன்றி உயிர்கள் அறியமாட்டாவாய் இருக்கின்றன என்பதை யுணருமிடத்து அவன் திருவருள் கண்ணுகைக்காணும்திறம் புலனாகும். அக்குறிப்புத் தோன்றப் பிள்ளையார், "மண்ணிடைவாழும் உயிர்க்கெல்லாம் கண்ணனே" (151:3) என்றும், "வானவரோடு மனிதர்க்கும் கண்ணினை" (150:9) என்றும், "கண்ணுவார் கருத்தனார்" (322:1) என்றும் ஓதுகின்றார்.

இவ்வாறு, அவன் திருவருள்கண்ணுகை அம்முதல்வனையும்அவனைத்தான்இன்றியமையாமையும், அறிவுக்கறிவாய் நின்று அறிவித்தருளும் அவனது அருள் நலமும் உயிர்கள் அறியுந்தோறும் பசுபோதம் கெடுதலால் வற்றாத பேரின்பம் சுரத்தலின், அவன்பால் பேரன்பு செலுத்தும் தன்மை யுண்டாகிறது. அந்த அன்பால் அம்முதல்வனது நினைவே உயிர்கட்கு நிகழ்ந்தவண்ணமிருக்கிறது. அதனால், முதல்வன் தன்பால் ஒன்றாயும் உடனாயும் நின்று இயக்குவதால், தன் கருவிகரணங்கள் தொழிற்படுகின்றன என்னும் உண்மையுணரப்படுகிறது. அவ்வுணர்வு, தன்செயலென ஒரு செயலும் உயிர்க்கில்லை யென்னும் உயர்நிலையைப் பயந்துவிடுகிறது. உயிரறிவு தன் தன்மைகெட்டு முதல்வன் அறிவொளியில் ஒன்றியுடனாதலால், அவ்வுயிரறிவை மறைத்துநின்ற மலவிருள் நீங்குகிறது. ஆகவே மலநீக்கமும் உண்மையறிவும் பொருந்திய சிந்தை தெளிவெய்துவதால், முதல்வனது திருவருள் ஞானம் தேனும் அமுதுமாய் இன்புறுத்த இறவாத இன்ப அன்பு உயிர்க்கு இறைவன்பால் உண்டாகிறது. ஆனதுபற்றியே பிள்ளையார், "உருகுவாருள்ளத் தொண்சுடர் தனக்கென்றும், அன்பரா மடியார்கள் பருகுமாரமுது" (245:5) என்றும்,

"ஊனமிலராகி யுயர்நற்றவமெய் கற்றவை யுணர்ந்த அடியார், ஞானமிக நின்றுதொழ நாளுமருள் செய்யவல நாதன்" (329:3) என்றும், "ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல், ஊனத்திரளை நீக்குமது வும் உண்மைப் பொருள்போலும்" (69:3) என்றும் ஓதி யருளுகின்றார். இறைவனை, அவன் திருவடி ஞானத்தாலே வழிபடவேண்டியிருத்தல் பற்றி, "ஞானமாமலர் கொடு நணுகுதல் நன்மையே" (284:7) என்றும், "ஊனத் திருள் நீங்கிட வேண்டில், ஞானப்பொருள் கொண்டடி பேணும்" (38:3) என்றும் அருளுகின்றார். அன்பால் நினைவாரது உள்ளத்தில் இறைவன் எழுந்தருளுதலால், ஊனத்திருள் எனப்படும் மலவிருள் நீங்குகிறது; அது நீங்குதலால், ஞானவொளியே நிலவுதல்கொண்டு, "ஏம மனத்தராய் இகழா தெழுந்தொண்டர், தீபமனத்தார்கள் அறியார் தீயவே" (86:8) என்று பிள்ளையார் ஓது கின்றார். ஞாயிற்றின்முன் இருள் நில்லாமையால், அவ் விருளை ஞாயிறு அறியாதொழிதல்போல, தீபமனத்தார் முன் தீய பயக்கும் மலங்கள் நில்லாமையால், "அறியார் தீயவே" என்று இயம்புகின்றார்.

இக்கூறிய நலங்கேட்டு வழிபாட்டின்கண் மனம் வைப்பவர்க்குத் தெளிவும் உண்மையறிவும் அன்பு முண்டாதற்குப் பிள்ளையார் ஒருநன்னெறியை யுணர்த்து கின்றார். இறைவன் உயிர்க்கு அருள்செய்யும் முதல் வனுதலை யறிந்து அவனை வழிபடுவோர் வழிபாட்டின்கண் ஒன்றியமனமுடையராதல் வேண்டும். "எண்ணொன்றி நினைந்தவர் தம்பால், உள்ளநின்று மகிழ்ந்தவனூராம்" (37:2) என்றும், "நெஞ்சொன்றி நினைந்தெழுவார்மேல் துஞ்சும் பிணியாயினதாமே" (38:4) என்றும், "நெறி

கொள் சிந்தையராகி நினைபவர் வினைகெட நின்றார்" (229:7) என்றும் கூறுவர், நெறிகொள்வதாவது, பல் பொருள்மேலும் சென்று அவற்றாற்பெறலாகும் சிற்றின்பம் வேண்டியலைகின்ற மனத்தை இறைவன்பால் செலுத்துதல், "செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம், துப்பனென்னாது; அருளே துணையாக ஒப்பர்" (28:1) என்று பிள்ளையார் கூறுதல்காண்மின். சிற்றின்ப நாட்டத்தால் சிவன் திருவடியை மறந்து நீங்குதல்பற்றி "மறவியென் சிந்தனைமாற்றி வாழவல்லார் தமக்கென்றும் பிறவியறுக்கும் பிரானார்" (203:8) என்று ஞானசம்பந்தப் பிள்ளையார் நயமுற வுரைக்கின்றார்.

இவ்வாறு மறக்கும் மனத்தினைமாற்றி இறைவன் திருவடியில் ஒன்றி நினைப்பார்க்கு, அவருள்ளத்து மாசினைப்போக்கி இம்மையின்பமும் மறுமை நலமும் அருளுவர் என்று பிள்ளையார் அறிவுறுத்துகின்றார். "உள்ளமார்ந்த அடியார் தொழுதேத்த வுகக்கும் அருள் தந்தெம், கள்ளமார்ந்து கழியப்பழி தீர்த்த கடவுள்" (2:7) என்றும், "கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டருத்தியோடு, உள்ளமொன்றியுள்குவார் உளத்துளான்" (237:6) என்றும், "நெஞ்சமிது கண்டுகொள் உனக்கென நினைந்தார், வஞ்சமதறுத்தருளும் மற்றவனை" (169:5) என்றும் பல விடத்தும் பரிந்து பேசுகின்றார். இவ்வாறு அவன் திருவடியை இடையறாது எண்ணுவோர், "உலகினில் பிறிது இரைபெறும் உடல் பெறுகுவதரிது" (122:2) என்பர். பிறிதிரை பெறும் உடல் பெறார்" எனவே, அமுதுண்ணும் தேவவுடம்பு பெறுதல் பெற்றாம்.

இனி, அவர்கள் இம்மண்ணுலகில் பெறும் பயன் கூறுதலுற்ற பிள்ளையார், திருவீழிமிழலைத் திருவிராகப் பதிகத்தின்கண் விரியக் கூறுகின்றார். இறைவனை ஒன்றிய மனத்தோடு வழிபட்டு நினைப்போர், அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவராவர்; அவரே "இருநிலமிதன்மிசை எழில்பெறும் உருவினர்"; "கலைமகள் தலைமகன் இவ னென வருபவர்"; "மாடமர் சனம் மகிழ்தரும் மன முடையவர்"; "புகழ்பகள் துணையினர்"; "அன்றினர் அரியென வருபவர்"; "கரம்பயில் கொடையினர்"; "ஒருக் கிய உணர்வினொடொளிநெறிசெலுமவர்"; "அடியவர் குழுமிட அவனியில் நிகழ்பவர்"; "மன்மதனென வொளி பெறுமவர்" (124) என்று கூறியருளுகின்றார்.

இவ்வாறு இறைவனை வழிபடுதற்கு வேண்டும் பல நன்னெறிகளை யுணர்த்திப் போந்த ஞானசம்பந்தப் பிள்ளையார்திருமுன், சிலர் தோன்றி உண்மையாகவே தம்உள்ளத்தில் எழுந்த ஐயங்களைத் தெரிவிக்கின்றார் கள். அவர்கட்குத் தக்க விடைகூறுவாராய் நெஞ்சின் மேல் வைத்து பிள்ளையார் உரைத்தருளுகின்றார்.

உயிர் நின்று உலவும் இவ்வுடம்பு, நிணம், குடர், தோல், நரம்பு, என்பு முதலியவற்றாலாகிய ஆக்கை யாகும்; இதன்கண் குற்றம் மலிந்திருக்கிறதேயன்றிக் குணமில்லை. குணமே நிறைந்த இறைவனைக் குற்றமே நிறைந்த உடம்புகொண்டு செய்யும் வழிபாடு எவ்வாறு பயன் விளைக்கும் என்பது அவர்கள் கொண்ட ஐயம். "இவ்வாற்றால் உடம்பு நிலையற்றதாயினும், குணமும் குற்றமும் நிறைந்த உடம்புடைய வானவரும் தானவரும் வழிபட்டு உய்தி பெறுகின்றார்களன்றோ; ஆதலால் நீவிரும்

உய்திபெறலாம்; ஐயத்தால் மையல்கொண்டு அஞ்ச வேண்டா" என்பாராய்ப் பிள்ளையார்,

"நிணங்குடர் தோல்நரம் பென்புசே ராக்கைதான் நிலாயதன்றால்
குணங்களார்க் கல்லது குற்ற நீங்காதெனக் குலுங்கினாயே;
வணங்குவார் வானவர் தானவர் வைகலும் மனங்கொடேத்தும்
அணங்க னாரூர்தொழு தூய்யலாம்மையல்கொண்டஞ்சல்நெஞ்சே"

என்று உரைக்கின்றார். 'இவ்வாறு பிறவியால் துன்ப முண்டாதலால் அது காட்டி மயக்கும் இன்பத்தை விரும்பாது துறவுபூண்டார்க்கன்றி ஏனையோர்க்குத் துன்பம் நீங்குமாறில்லை; ஆதலால் வழிபாடு எவ்வகையில் துன்பம் நீக்கும்?' என்று எழுந்த ஐயத்தை நீக்குவார், வழிபாடு ஒன்றே துன்பத்தைத் துடைக்கும் நன்னெறியாகும் என்று அறிவுறுக்கின்றார். "திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே, அறங்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான்" (179:6) என்று பிறிதோரிடத்தும் உரைத்துள்ளவாறே, ஈண்டும், அம்முதல்வன் அறக்கடவுளாதலால், வழிபடுவார் நோய் நீக்கி இன்பம் செய்வன் என்பார்,

"பிறவியால் வருவனகேடுள வாதலால் பெரியஇன்பத்
துறவியார்க்கல்லது துன்பநீங்காதெனத் தூங்கினாயே
மறவல்நீ மார்க்கமேநண்ணினாய் தீர்த்தநீர் மல்குசென்னி
அறவனாரூர் தொழுதுய்யலாம் மையல்கொண்டஞ்சல் நெஞ்சே"

(215:3,5) என்று தெருட்டுகின்றார்.

இவ்வாறு தெளியத் தகுவனவற்றைத் தெளியவுரைத்தும் தெருளாது பிணங்குவோரை, "உருவிலான் பெருமையை உளங்கொளாத அத்திருவிலார் தங்களைத் தெருட்டலாகுமே" (272:2); "பேச்சினாலும்மக் காவதென்

பேதைகாள் பேணுமின்" (145:1) என்று கழறிக்கூறி நெறிப்படுத்துகின்ருர்.

இதனாலும் தெருளாது நீங்குவோரை ஏனைநன்மக்கள் கண்டு அருவருத்தாராக, பிள்ளையார், "அன்றின்ருெடென்றும் அறிவானவர்க்கும் அறியாமை நின்ற அரன்" (224:4) ஆதலால் அவரைப் பரவுவோரும் பழித்து இகழ்வோருமுண்டு; அவரை இகழன்மின் என்பார் இறைவனூர், "பரவுவாரையும் உடையார் பழித்திகழ்வாரையும் உடையார்" (230:5) என்று கூறியருளுகின்ருர். இவ்வண்ணமே, பிணங்கிநிற்கும் பவுத்தரையும் சமணரையும் வெருளாதீர்கள் என்று நெறிப்படுத்துவார், அவர் கூறும் சொற்களைக் கேட்டுப் பிணங்கும் நம்மவரையும் தழீஇக் கொண்டு, "ஆதர் அமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும் பேதைமை கேட்டுப் பிணக்குறுவீர் வம்மின், நாதனை நல்லூர்ப் பெருமணம் மேவிய, வேதனதாள் தொழ வீடு எளிதாமே" (383:10) என்றும், அச்சமண புத்தர்களால் தொழப்படும் தேவராலும் நம் இறைவன் தொழப்படுவான் என்பார், "மூடிய சீவரத்தார் முதுமட்டையர் மோட்டமணர், நாடிய தேவரெல்லாம் நயந்தேத்திய நன்னலத்தான்" (317:10) என்றும் கூறி நல்வழியருளுகின்ருர்.

இனி, தாம் பாடியருளிய திருப்பதிகங்களால் மக்களை இருவகுப்பினராகக் கொண்டு ஒருதிறத்தாரைப் பெரியோரென்றும் ஒருதிறத்தாரைச் சாதாரணமக்களென்றும் கருதித் தாம் உரைக்கக்கருதும் நல்லுரைகளை உரைத்தருளுகின்ருர். பெரியோராவார் புலன்களையடக்கி யறுவகைக் குற்றங்களைக் கடிந்து இறைவனை ஞானக்கண்ணினல் தம்முள்ளே கண்டு அவனோடு ஏகனாகி இறை

பணி நிற்பதும் அவன்பால் அயரா அன்புகொண்டு மறவாது ஏத்தலும் செய்வோராவர். அவர்கட்குத் தாம் உரைக்கவேண்டுவதொன்று மின்மையின், பிள்ளையார் அவர்தம் செயலை யெடுத்துப்பாராட்டி அதனைக்காணும் பிறரும் அப்பெரியோர் பெருமையறிந்து வழிபட்டொழுகு மாறு செய்தருளுகின்றார். "கற்றல் கேட்டலுடையார் பெரியார்கழல் கையால் தொழுதேத்தப், பெற்ற மூர்ந்த பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே" (1:2); "பெரியார் கழலென்றுந் தொழுதேத்த, உள்நிலாவியவர் சிந்தையில் நீங்கா ஒருவன்" (2:3); "ஞானிகளா யுள்ளார்கள் நான் மறையை முழுதுணர்ந் தைம்புலன்கள் செற்று, மோனி களாய் முனிச்செல்வர் தனித்திருந்து தவம்புரியும் முது குன்றமே" (131:10); "ஊனமிலராகி யுயர்நற்றவமெய் கற்றவையுணர்ந்த அடியார், ஞானமிக நின்று தொழ நாளுமருள் செய்யவலநாதன்" (329:3) என்பன முதலிய திருப்பாட்டுக்களால் அப்பெரியார் பெருமையை எடுத் தோதுவதைக் காணலாம். ஏனையெல்லாரையும் நோக்கி ஏனைப்பதிகங்கள் பலவற்றையும் அருளிச்செய்கின்றார். பெரியோர் பெருமையும் செயலும்கண்டு தம்மாட்டாமை யால் வருந்துவோரை நோக்கி,

"சாநாளும் வாழ்நாளும் தோற்றம் இவை
சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
ஆமா றறியா தலமந்து நீர்,
அயர்ந்தும் குறைவில்லை; ஆனேறுடைப்
பூமாண் அலங்கல் இலங்கு கொன்றை
புனல்பொதிந்த புன்சடையினா னுறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே" (59:3)

என்றும்,

"சீர்கெழு சிறப்போவாச் செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சே! இரண்டுற மனம்வையேல்;
கார்கெழு நறுங்கொன்றைக் கடவுளதிடம் வகையால்
பார்கெழு புகழோவாப் பருப்பதம் பரவுதுமே" (118:6)

என்றும் இவைபோல்வனபலவும் பிள்ளையார் உரைப்பதைக் காண்கின்றோம். எல்லோரையும் தம்மோடு உளப்படுத்தி, இறைவனை வணங்கி வினைப்பகையைக் கெடுப்போம் என்பவர், கேளாது அயல்நெறிகளிற் செல்வோரை "பேய்த்தேர்ப்பின் குடங்கொண்டு நீர்க்குச்செல்வார் போதுமின்" (118:10) என்று விலக்கிவிடுகின்றார். எல்லாரும் சூழ்ந்துநிற்ப, இறைவனை வழிபடலுற்ற பிள்ளையார், "அவர் அனைவரும் தாம் செய்யும் வழிபாட்டில் பிணிப்புண்டு நிற்றற்பொருட்டு, "அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர், உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கூனமன்றே, கைவினை செய்தெம்பிரான்கழல் போற்றுதும், நாம் அடியோம்" என்று உரைக்கின்றார். நாம் அடிமைகளாதலின், நாம் இறைவனுக்குக் கைவினை செய்வதன்றிப் பிறிதொன்றும் செய்தற்கில்லோம் என்றற்குக் "கைவினைசெய்து எம்பிரான் கழல் போற்றுதும்" என்று அருளியிருத்தலைக் காண்மின். அக் கைவினைகள் இவையென்று கூறுவார், "காவினை இட்டும் குளம்பலதொட்டும் கனிமனத்தால், ஏவினையால் எயில்மூன்றெரித்தீர்! என்று இருபொழுதும், பூவினைக் கொய்து" இறைவன் திருவடியைப் போற்றுவதாகும் என்கின்றார்.

இனி, வழிபடுங்காலத்து வழிபடும் தமது மனக்கருத்தின் நிலைமையை விளக்கி,

"மறக்கும் மனத்தினைமாற்றியெம் ஆவியைவற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருவடிக்கீழ் பிழையாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமையேத்தும் நாமடியோம்
சிறப்பில் இத்தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்"

"கருவைக் கழித்திட்டு வாழ்க்கைகடிந்து உம்கழலடிக்கே
உருகி மலர் கொடுவந் துமையேத்தும் நாம் அடியோம்"

என்று தெரிவித்தருளுகின்றார். இவ்வழிபாட்டால் இறைவன், உலகிற் போகங்கள் மேற்செல்லும் வேட்கைகள் போந்து தம்மை அலைத்துவருத்தா வண்ணம் ஆண்டான் என்பார், "மூலத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம், விலைத்து அலையாவணம்கொண்டு எமையாண்ட ,விரிசடையீர்" என்றும் வியந்தோதுவதைக் காண்மின்.

இவ்வாறு பல்வகையிலும் பத்திநெறியின் நலத்தைப் பல திருப்பதிகங்களால் தாம் எடுத்தோதினாராதலால், அவற்றைப் பலரும் மேற்கொண்டு பொருளுறவுணர்ந்து பாடிப்பரவுதல் வேண்டுமெனப் பரிந்தோதுகின்றார். கற்றோர் விரித்தோதும் விரதங்களும் ஞானங்களும் ஆகிய எல்லாம் இப்பத்திச்செயலுக்குரிய ஞானமேயாகும் என்பது ஞானவேட்கை யுடையாரை ஒருப்படுத்துகின்றது. "வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால், வாடு ஞானமென்னுவதும் எந்தைவலஞ்சுழி, நாடி ஞானசம்பந்தன செந்தமிழ் கொண்டிசை, பாடும் ஞானம் வல்லார் அடிசேர்வது ஞானமே" (138:11) என்பது காண்மின். என்னுவதும் என்பதன் ஈற்றிலுள்ள உம்மை ஆக்கப் பொருள்தாய், விரதங்களால்வாடும் ஞானம் என்னுவதாம் என்று பொருள் தருகிறது.

நன்னெறிகாட்டும் ஞானசம்பந்தத் திருப்பதிகங்களைப் பயின்றோத வரும்பயன் காட்டுவதும் ஞானசம்பந்தர் மேற்கொண்டுரைக்கும் நன்னெறியாதலின், அதனைக் கூறி இக்கட்டுரையை முடித்துக்கொள்ளுகின்றோம்.

சித்தாந்த சைவச் செந்நெறி நிற்கும் பெரியோர்களே, "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்" மெய்கண்டதேவர் காட்டும் மெய்ம்மொழியாகும்; "தன்னையடைந்தோர் வினைதீர்ப்பதன்றோ தலையாயவர் தம் கடனுவது தான்" (1:4) என்று நாவரசரும், "தாமென்றும் மனம் தளராத் தகுதியராய் உலகத்துக், காமென்று சரண் புகுந்தார் தமைக்காக்கும் கருணையினுன்" (176:2) என்று ஞானசம்பந்தரும் கூறுவர். இவ்வாறு தன்னை யடைந்தாரை யருளும் தலைவனை பரமன், அருளுந்திறமோ மிக வியப்பானது; தன்னை யடைந்தோர், தன்னைப் போலவே இன்பம்பெற அருளுகின்றுன் என்பார், "சங்கரனுர் தம்மைப்போலத் தம்மடியார்க்கும் இன்பளிப்பவர்" (238:2) என்று கூறுகின்றுர். அவ்விறைவனே போகமும் யோகமும் ஒருங்குடையனுவான்; "கல்லூர்ப் பெருமணத்தான் நல்ல போகத்தான் யோகத்தையே புரிந்தான்" (384:7) என்பது காண்மின். இத்திருப்பதிகம் பயின்றோதிப் பரவுவோரும், போகமும் யோகமும் பெறுவர் என்பது கூறலுற்று, "வெங்குருவில் வேதியன் விரும்புதமிழ் மாலைகளீ வல்லார், சித்திர விமானமமர் செல்வமலிகின்ற சிவலோகமருவி, அத்தகுகுணத்தவர்களாகி யனுபோகமொடு யோகமவரதே" (338:11) என்று உரைத்தருளுகின்றுர். திருப்பதிகப் பயிற்சியால் விளையும் அனுபோகம் சிவலோகானுபோகமாகிய சிவ போகமாகும் என்பதனுல், சிவஞானம் இத்திருப்பதிகங்களால் விளையுமென்பது இனிது பெறப்படும்.

முடிப்புரை

இதுகாறும் திருஞானசம்பந்தப் பெருந்தகை வழங்கிய ஞானநெறிகள் இவையென்பது கூறியவாறும்; இவையே யன்றி, ஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகங்களில் மிகப் பல சமயவுண்மைகளும் இயற்கை நலங்களும் மலிந்து கிடக்கின்றன. இறைவழிபாட்டில் ஈடுபடுவோர்க்கே யன்றி, இலக்கிய வழிபாட்டில் ஈடுபட்டோர்க்கும் இப் பெருமான் வழங்கிய திருப்பாட்டுக்கள் சிறிய இன்ப நிலையங்களாதல் இனிது புலனாகும்.

இத்திருப்பதிகங்களால் விளக்கப்படும் இறைவன் இயல்பும், இறைவன் எழுந்தருளும் திருப்பதிகளின் சிறப்பும், ஆங்காங்கு இறைவனை வழிபடும் நன்மக்கள் இயல்பும் அவர் செய்யும் வழிபாட்டின் மாண்பும், ஞான சம்பந்தப்பெருமான் திருவாய்மலர்ந்தருளியதன் பயனாக, பிற்காலத்தே வாழ்ந்த அரசர்களும் செல்வர்களும் பிறரும் சைவத் திருப்பணியில் ஈடுபட்டுச் சைவத்தின் மாண்பினை நிலைபெறச் செய்யலுற்றனர். திருப்பதிகங்களைத் திருக் கோயில்களில் நாடோறும் ஓதுதல் வேண்டும் என நிபந்தங்கள் நிறுவிய வேந்தர் பலரைக் கல்வெட்டுக்கள் ஒளிக்காது கூறுகின்றன. சிலபதிகங்கள் கற்களிற் பொறிக் கப்பட்டிருத்தலையும் அறிகின்றோமன்றோ!

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச், சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி" என்று கடவுளுண்மை தெளிவித்து, "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும், கேட்பான்புகில் அளவில்லை கிளக்கவேண்டா, கோட்பாலனவும் வினையும் குறுகாமை யெந்தை, தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க

தக்கார்'' (312:4) என்றதனுல் வழிபாட்டுநெறியே முடிந்த முடிபான் நன்னெறியென ஞானசம்பந்தர் நிலை நாட்டியதன் விளைவே, இன்று நாம் சைவரென்றும், நமக்குரியது சைவசமய நெறியென்றும் நினைந்தும் பேசியும் இறைபணியில் ஈடுபட்டுய்தற்கும் ஏதுவாயிற்றெனின், அது மிகையாகக் கருதப்படமாட்டாது.

இனி, நம் தமிழ்மொழி இயலிசை நாடகமென முத்திறத்ததென்பது உலகறிந்த செய்தியாகும். இயல் ஒழிந்த இசைநாடகங்களை யுணர்த்தும் பண்டைத்தமிழ் நூல்கள் பல இறந்தொழிந்தன என்பதும் யாவரும் அறிந்தது. சிலப்பதிகாரமும் திருமுறைகளும் இல்லையென்றால் தமிழர்க்கு இசைச்சுவையே தெரியாது என்று பேசக்கூடிய இசைவீரர்கள் தோன்றியிருப்பர். பண்டைத் தமிழிசையின் ஒருபகுதிக்குச் சீரிய இலக்கியமாக இத் திருப்பதிகங்கள் இலங்குகின்றன. இறைவன் வழிபாட்டு நெறியை வற்புறுத்தப் போந்த ஞானசம்பந்தப்பெருமான் தமது அருமைத் திருப்பதிகங்களை இசைப்பாட்டுக் களாகவே அமைத்தது ஒரு நன்னெறியாயிற்று. இவற்றிற் காணும் இசை நுட்பங்களை அடிகள், திரு. விபுலானந்த அடிகள் ஆராய்ந்து முடிபுசெய்துள்ளார்கள். "அந்தணர் வேள்வியும் அருமறைத்துழனியும், செந்தமிழ்க்கீதமும் சீரினல் வளர்தர," (286:3) என்றும், "ஊறுபொருளின் றமிழியற் கிளவி தேரு மடமாதருடனு, வேறுதிசை யாடவர்கள் கூறஇசைதேரும் எழில் வேதவனமே'' (334:4) என்றும் பிள்ளையார் ஓதுவதுகாண்மின். "ஊறு பொருள் ... ... வேதவனமே'' என்ற பகுதியில் தமிழ் மொழியினுலமைந்த இசைப் பாட்டுக்களை இசைநலங் கனிய மகளிர்பாட, வேற்றுநாட்டு ஆடவர் தம்மொழியில்

அமைந்த பாட்டிசையை அம்மகளிருடன் உடனிருந்து பாடி இசைநலம் தேர்ந்து இன்புறுகின்றனர் என்று ஞானசம்பந்தர் கூறுவதை நோக்கின், தமிழ்ப்பாட்டின் வாயிலாக இசைக்கலையை வளர்த்தல் வேண்டுமென்பது நன்கு புலனாகின்றது.

ஞானசம்பந்தப்பெருமான் "செந்தமிழ்க்கீதம்" என்றும், "செய்யதண் தமிழிசை" யென்றும், "எண்ணுமோ ரெழுத்து மிசையின் கிளவி தேர்வார் கண்ணு முதலாய கடவுள்" (170-4) என்றும் கூறி கண்ணெனப்படும் எண்ணும் எழுத்தும்போல இசையும் ஒத்தமதிப்புடைய தென்றும், எண்ணெழுத்துக்களோடு இசையுங் கற்றற் குரிய தென்றும், இவற்றைக் கற்போர் வழிபடும் முதற் கடவுள் சிவபரம்பொரு ளென்றும் உயர்த்தோதி ஒள்ளிய தமிழிசையை வளர்ப்பது, உயர்ந்த செல்வத் துரவோர்க்கும் இறைவழிபாடு நயக்கும் யாவர்க்கும் கடன் என்பது குறித்ததே யென வுணரவேண்டும். **பிறர் எவ்வாறாயினும், தமிழ்ச்செல்வர்களும், ஆதீனங்களும், கோயிலார்களும் செந்தமிழால் இயன்ற இசையினையே பேணிப் புரக்கும் கடமையுடையராவர்;** திருஞானசம்பந்தர் செய்தருளிய இத்திருப்பணியை நாம் மேற்கொள்வதால் நம் சைவத்துக்கும் நம் சைவத் தமிழ்க்கும் குறைவிலா நிறைவே எய்துமாதலின், இந்நெறியினை அவர்கள் மேற் கொண்டு தகுவன செய்வார்களாக. இக்காலம் கற்றவர் கல்லாதவர், செல்வமுடையவர் இல்லாதவர், முதியவர் இளையவர், ஆடவர் பெண்டிர் எல்லாரும் இசைமேல் பெருமோகங் கொண்டிருக்கும் காலமாகும்; இம்மோகம் மக்களை வேறு வழிகளிற் செலுத்திக் கடவுட்கொள்கை நல்லொழுக்க முதலியவற்றை நெகிழ்வித்துத் துன்பத்தி

லாழ்த்துமோ என்ற அச்சம் அறிஞர்கட்குத் தோன்றி யிருக்கிறது. இதை யுணர்ந்து அறவோரும் செல்வரும் ஒருமித்த நோக்கத்துடன் தமிழிசைவாயிலாக ஞானசம்பந்தப் பெருந்தகை முதலாயினர் வற்புறுத்திய நன்னெறிகளைப் பரப்புவார்களாக. எதிர்காலவுலகத்தின் செம்மைநிலை வேண்டிப் பல்வேறு முறைகளைப் பலர் காணுங்கால் சமய நெறி யொழுகும் சான்றோர் இதனைக் கருத்திருத்தி வேண்டுவன முயல்வார்களாக.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டுந் தென்
ஆலவாயி லுறையும் எம் ஆதியே"

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம்.